Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 27 சனிக்கிழமை (09-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:195

## வில்பத்துக் காட்டிலிருந்து வியாழன் விமானத்தை நோக்கி ஏவுகணை?

கொழும்பு,ஜூன்9

வில்பத்துக் காட்டுக்கு மேலாக நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் சென்றுகொண்டிருந்த விமானப்படையின் விமானம் ஒன்றை நோக்கி ஏவுகணைத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அப்பகுதி மக்கள் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

நிலத்திலிருந்து ஏவப்பட்ட ஏவுகணையிலிருந்து புறப்பட்ட சன்னங்கள் தீப்பிழம்புபோல் விமானத்துக்கு அருகில் வெடித்தன என்றும்-

புகைமண்டலம் போல் அந்தப் பகுதி காட்சியளித்தது என்றும் - ஊர்மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தகவலை உடன் விமானப்படையின் தலைமையகத்துக்கு பொலீஸார் தெரியப்படுத்தியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து விசேட

(14ஆம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் படுகொலைகள் வழக்கு அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றம்

### சாவகச்சேரி நீதிமன்றத்திலிருந்து

கொழும்பு,ஜூன்9

மிருசுவிலில் வீடு பார்க்கச் சென்ற அப்பாவிப் பொதுமக்கள் 8 பேர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் இந்த வழக்குத் தொடர்பான விசாரணைகள் சாவகச்சேரி நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்தன.

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 14 சிப்பாய்களில் ஒருவரான கவிந்த திஸநாயக்க, சாவகச்சேரி நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை இடம்பெற்றால் தனது சட்டத்தரணிகள் ஒத்துழைக்காமல் போகலாம் என மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார்.

இந்த முறைப்பாட்டை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்தத் தீர்மானத்தை எடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-7)

# சமாதான முயற்சிகளிலிருந்து தூதுவர் சொல்ஹெய்ம் 'அவுட்'!

## நோர்வேயின் உயர் மட்டமே இனிமேல் இதில் ஈடுபடுமாம்

கொழும்பு,ஜூன்9

**இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அந்தப் பங்களிப்பில் இருந்து வெளியேற்றப்பட்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.**

**அதனை ஊர்ஜிதப்படுத்துவது போல 'சமாதான முயற்சிகளில் நோர்வேயின் உயர்மட்டப் பங்களிப்பே இருக்கும்' என்று இலங்கை அறிவித்திருக்கின்றது.**

நேற்றுமுன்தினம் நோர்வே வெளிவிவகார அமைச்சர் த்ரொப் ஜோன் ஜக்லண்டுடன், தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் கொழும்பு வந்திருந்த போதும், வெளிவிவகார அமைச்சர் ஜக்லண்டை மட்டுமே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது இல்லத்துக்கு அழைத்துப் பேசியதும், இந்தக காரணத்தினால்தான் என்று தெரிவிக்கப்படுகிறது.

'நோர்வேயின் உயர் மட்டப் பங்களிப்பே இனி இருக்கும்' என்று இலங்கை வெளிவிகார அமைச்சு நேற்று இரவு அறிவித்தமை தூதர் எரிக் சொல்ஹெய்ம் ஓரங்கட்டப்பட்டிருக்கின்றார் என்பதை நிரூபிப்பதாக அமைகின்றது என இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இலங்கையில் சமாதான முயற்சியில் பங்களிப்புச் செய்ய நோர்வே

(14ஆம் பக்கம் பார்க்க)

## தடைநீக்கம், யுத்தநிறுத்தம் ஆகியன குறித்து அரச உயர் மட்டத்தில் அடிக்கடி ஆராய்வு

கொழும்பு,ஜூன்9

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் நேரடிப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க வேண்டும் என்று சர்வதேச அழுத்தம் அதிகரித்து வருவதை அடுத்து -

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள யுத்தநிறுத்தம், தடைநீக்கம் ஆகியன தொடர்பான கோரிக்கைகள் குறித்து அரசு உயர் மட்டத் தலைவர்களும் பாதுகாப்புத் துறையின் உயர் தளபதிகளும் அடிக்கடி கூடி ஆராய்ந்து வருவதாக அரசு உயர் வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதால் ஏற்படக் கூடிய சாதக, பாதகமான நிலைமை தொடர்பாகவும் -

யுத்தநிறுத்தம் மேற்கொள்ளவதால் ஏற்படக் கூடிய பின்விளைவுகள் தொடர்பாகவும் -

இந்தக் கலந்துரையாடல்களில் ஆராயப்பட்டுள்ளன.

புலிகள் மீதான தடையை முழுமையாக நீக்காமல் இடைக்காலமாக நீக்குவது குறித்து அந்தக் கலந்துரையாடல்களில் ஆராயப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.(உ-3)

## தடையை நீக்கிப் பேச்சு நடத்துக 10 தமிழ்க் கட்சிகள் வேண்டுகோள்

கொழும்பு,ஜூன்9

விடுதலைப் புலிகள் மீதான தடையை உடனடியாக நீக்கி, பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் எனறு அரசைக் கோரும் தீர்மானம் ஒன்றை பத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு எடுத்துள்ளது.

நேற்று மாலை நடந்த இந்தக் கூட்டமைப்பின் கூட்டத்தில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அரசு காட்டும் அக்கறையின்மைக்கு கடும் கண்டனமும் தெரிவிக்கப்பட்டது.

நோர்வேயின் அனுசரணையுடன் பேச்சுக்கள் உடன் ஆரம்பிக்க வேண்டும் என்றும் -

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் மூன்று கோரிக்கைகளையும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் -

அந்தத் தீர்மானத்தில் அரசைக் கோரியுள்ளது அந்தக் கூட்டமைப்பு.

இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஒன்று எட்டப்படும்வரை, கல்முனையை தனி மாவட்டமாகப் பிரகடனம் செய்யவேண்டும் என்ற கோரிக்கையை கைவிடும்படி முஸ்லிம் காங்கிரஸைக் கோருவதென்றும் மற்றொரு

(14ஆம் பக்கம் பார்க்க)

## 2 சிப்பாய்களும், சார்ஜண்ட்டும் வவுனியாத் தாக்குதல்களில் பலி

வவுனியா,ஜூன்9

வவுனியாவில் இரு வேறிடங்களில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் படையினரில் இருவரும் பொலீஸ் சார்ஜண்ட் ஒருவரும் உயிரிழந்தனர்; ஊர்காவலர் ஒருவர் காயமடைந்தார்.

மகாகச்சைக்கொடி - பிரப்பமடு வீதியில் பிரப்பமடுவில் வைத்து பிற்பகல் 2.35 மணியளவில் படையினரின் உழவு இயந்திரம் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இரு சிப்பாய்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

அந்தப் பகுதியில் வீதிப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த படையினருக்கு உணவு விநியோகம் செய்துவிட்டு முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருந்த படையினர் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

செட்டிக்குளம், நேரியகுளம் என்னும் இடத்தில் குறூஸ் சந்தியில் அமைந்துள்ள படையினரின் சோதனை நிலையம் மீது நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலீஸ் சார்ஜண்டான செனவிரத்ன

(14ஆம் பக்கம் பார்க்க)

## விந்துனுவெவ தடுப்பு முகாம் கொலைகள்; கைது செய்யப்பட்ட அனைவரும் விடுவிப்பு

கொழும்பு,ஜூன்9

விந்துனுவெவ தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த 29 தமிழ் இளைஞர்கள் வெட்டியும் சுட்டும் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த படையினர் மற்றும் பொலீஸாரில் எஞ்சிய 11 பேரையும் விடுதலை செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் சிபாரிசின் பேரில் இவர்கள் இப்போது விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக ஆரம்பத்தில் சந்தேகத்தின் பேரில் அந்த முகாமில் அப்போது பணியில் இருந்த படை அதிகாரிகள் உட்பட 45 பேர் கைது செய்யபபட்டிருந்தனர். எனினும் பின்னர் நடைபெற்ற விசாரணைகளில் இருந்து 11 பேர் தவிர எஞ்சியோர் விடுவிக்கப்பட்டிருந்தனர். அந்தப் பதினொரு பேரும் கூட இப்போது விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இவ்வாறு தற்போது விடுதலை செய்யப்பட்டவர்களில் 2 பொலீஸாரும் 2 இராணுவச் சிப்பாய்களும் அடங்குகின்றனர்.

எனினும் இவர்களில் விடுதலை தொடர்பாகக் காரணம் எதுவும் கூறப்படவில்லை.

இதேவேளை -

மேற்படி படுகொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தவென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைகுழு தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வருகின்றது.

(உ-7)

## விகாரமாதேவிப் பூங்காவின் நிர்வாகம் குறித்து சர்ச்சை!

### ஊழியர்கள் நேற்று கைகலப்பு

கொழும்பு,ஜூன்9

விகாரமாதேவிப் பூங்காப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் நகர அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களுக்கும் கொழும்பு மாநகரசபை ஊழியர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கைகலப்பில் 4பேர் காயமடைந்தனர்.

பூங்காவில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த மாநகரசபை ஊழியர்களை நகர அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்கள் பலாத்காரமாக அகற்றிவிட்டுத் தாங்கள் துப்புரவுப் பணியில் ஈடுபட்டபோதே இந்தக் கைகலப்பு இடம்பெற்றது.

ஐ.தே.கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள கொழும்பு மாநகர சபையின் கீழ் பூங்காவின் நிர்வாகம் இருந்து வருகிறது.

இந்தப் பூங்காவின் நிர்வாகத்தை தனது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டுவிட்டதாக நகர அபிவிருத்தி அதிகார சபை ஒருதலைப்பட்சமாக அறிவித்தது.

இதனை அடுத்தே இந்தக் கைகலப்பு இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

(உ-7)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியை
**திருமதி மதுமதி வசந்தகுமார்**
அவர்களின் தந்தையார்

## அமரர் சிவசம்பு சிவயோகேஸ்வரன்

*(ஓய்வுபெற்ற பிரதம பிரதித் தபால் அதிபர், யாழ்ப்பாணம்)*

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**பாடசாலை பழைய மாணவர் சங்கம்.**
***யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.***

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 | 22 |
| - | - |
| 08 | 05 |
| - | - |
| 1952 | 2000 |

## திருமதி புனிதவதி கதிர்காமநாதன்

ஆண்டு ஒன்று சென்றதம்மா
ஆறாத எம் இதயம் துடிக்குதம்மா
ஒளி நீங்கி ஓர் ஆண்டு ஒளிந்தோடினாலும்
விழி நீரில் ஈரங்கள் விட்டகலவில்லை...!

*நிரந்தர முகவரி:-*
*பழைய பொலீஸ் நிலைய வீதி,*
*சாவகச்சேரி.*

*தற்காலிக முகவரி:-*
*ஆஸ்பத்திரி வீதி,*
*சங்கானை.*

துயரால் தவிக்கும்:-
க.கதிர்காமநாதன் - கணவன்,
க.கௌதமி - மகள்,
க.கௌதமன் - மகன்.

(88860)

# அறிவித்தல்

1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாதகலை நிரந்தர வதிவிட மாகக் கொண்ட மாணவர்கள் கௌரவிக்கப்பட வுள்ளனர். இதுவரை தொடர்பு கொள்ளாத மேற்படி மாணவர்கள்

'**தலைவர்/பொருளாளர், மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கம்,**
**சென்.ஜோசப் மகாவித்தியாலயம், மாதகல்**'

என்னும் முகவரியில் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**செயலாளர்,**
**மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கம்.**

(88867)

# விசேட பொதுக்கூட்டம்

## பச்சிலைப்பள்ளி இடம்பெயர்ந்தோர் நலன் பேணும் சங்கம்

காலம் : 2001-06-13 புதன்கிழமை பி.ப. 2.30 மணி
இடம் : பளை (புலோலி) மத்திய கல்லூரி மண்டபம்
விடயம் : 1- நிர்வாக சீரமைப்பு
2- ஏனைய சங்க விடயங்கள்

நிர்வாக உறுப்பினர்களையும், ஏனைய சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*பச்சிலைப்பள்ளி இடம்பெயர்ந்தோர்*
*நலன்பேணும் சங்கம்,*
*பளை*

(C/17051)

**- தலைவர்.**

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஜூன்9

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் இணுவில் அறிஞர் விளையாட்டுக் கழகமும் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகமும் பங்குபற்றுகின்றன. (ஐ-86)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்9

லாலாசோப் நிறுவனத்தின் ஆதரவுடன் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டம் இன்று சனிக்கிழமை சமரபாகு நியூட்டன் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம்வருமாறு:-

- காட்சி ஆட்டம் - பிற்பகல் 3.30 மணி - நவிண்டில் கலைமதி வி.க. எதிர் வல்வெட்டி கருணாகரன் வி.க. அணி.
- அரையிறுதி ஆட்டம் - மாலை 4.30 மணி - வதிரி டயமன்ஸ் வி.க. அணி எதிர் அல்வாய் மனோகரா வி.க. அணி. (ஐ-10)

# இன்று

இளவாலை,ஜூன்9

மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கலட்டியராகிரி முருகமூர்த்தி ஆலய முன்றலில் வித்தியாலய அதிபர் திருமதி சி.விக்னேஸ்வரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ஆறு.திருமுருகனும் சிறப்பு விருந்தினராகக் கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் கே.ஸ்ரீபதியும் கலந்துகொள்வர். (3-48)

* * *

ஊர்காவற்றுறை, ஜூன்9

ஊர்காவற்றுறை, கரம்பொன் வடக்கு மகளிர் அபிவிருத்திச் சங்க கட்டடத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சங்கத் தலைவி ஜீவா அலோசியஸ் ரமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.ரகீஸ். செல்வநாயகம் பிரதம விருந்தினராகவும், ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ந.மதனராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (3-16)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்9

உரும்பிராய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.மணிக்கு சங்கத்தின் முன்றலில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி கலந்து கொள்கின்றார். (-3)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலய

## மகா கும்பாபிஷேக தின விழா

**(மணவாளக் கோல நாள்)**
**நாளை (10-06-2001) ஞாயிற்றுக்கிழமை**
**நிகழ்ச்சி நிரல்**

காலை 7.00 மணி : **நவோத்தர ஸஹஸ்ர சங்காபிஷேகம்**
உபயம்: திரு.ச.தணிகாசலம்(சமாதான நீதிவான்)
நண்பகல் 12.00 மணி : **மாகேஸ்வர பூசை**
பிற்பகல் 2.00 மணி : **திருக்கல்யாணம்**
மாலை 4.30 மணி : **சுவாமி வீதி உலா வருதல்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபை,
ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபை,
**இந்துமன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(88861)

# திருத்தம்

**காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**கிளைக்குழுத் தெரிவு 2001**

மேற்படி விடயம் சார்பாக 26.05.2001 இல் வெளியிடப்பட்டுள்ள உதயன் பத்திரிகை அறிவித்தலில் 2001.06.31 என தவறுதலாக ஏற்பட்ட பிழையை 2001.06.30 எனத் திருத்திக்கொள்க.

க.நடராசா
செயலாளர்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், காரைநகர்.

(C/17049)

# மரண அறிவித்தல்கள்

## சந்தியாப்பிள்ளை யோசப் (முத்தையா)

*(இளைப்பாறிய லிகிதர், கடற்படைத் தளம், திருமலை)*

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியாப்பிள்ளை யோசப் (முத்தையா) 05.06.2001 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை, மரியம்மாவின் அன்பு மகனும், விக்ரோரியாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோப்பர், இராசம்மா, பிலிப்புப்பிள்ளை மற்றும் லோறன்ஸ் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற அலெக்சான்டர் (போக்குவரத்து முன்னாள் அதிகாரி, AIR CEYLON), திருச்செல்வம் (கொழும்பு), விக்டர் (ஜேர்மனி), செல்வநாயகம் (பொறியியலாளர், லண்டன்), மரியதாஸ் (கல்வித் திணைக்கள அதிகாரி, கணனி, திருமலை), அன்ரனிதாஸ் (கொழும்பு), டெய்சி, மேசி, சேவியர் (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற புதுமைராணி, மரியதாஸ் மற்றும் கிறேஸ்மலர், ரமணகுமாரி (லண்டன்), காமலின், கொறற்றி (கனடா), ரமணதாசன் (ஆசிரியர், யா/இந்துக் கல்லூரி), ஜசிந்தா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெசி (கனடா), அன்பழகன் (கணனி பொறியியலாளர், கனடா), மதியழகன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), சகுந்தலா (சிங்கப்பூர்), பாஸ்கரன் (கனடா), ஜொய்சி, கனிசியஸ், ஜஸ்மின், றொக்சி, றொடிசன், ஷைலா, கோகுலன், நிமலன், ஆனந்த் (பொறியியலாளர்), டெறன்சன், பவித்திரா, அனிற்றா (பிரான்ஸ்), இமாகுலேற்றா, பிரஷாந்தி, ஜொபித்தா, றெஜிங்டன், கிறிஷாந்தி, நிஷாந்தன் (கொழும்பு), நிரோஷினி, சுகிர்தன், பிருந்தன், சிந்துஜன், மரியநேசன், டிரேசி, லைசறி ஆகியோரின் அன்புப் பேரனும் தாட்சாயினி, கோஷிகா, யோசுவாஸ், சந்தோஸ் ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2001) சனிக்கிழமை 77A, கோயில் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் புனித யுவாணியார் கோயிலில் நல்லடக்க ஆராதனை இடம்பெற்று பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**77A, Temple Road,**
**Jaffna.**

தகவல்:
விக்ரோரியா (மனைவி),
பிள்ளைகள்

(88827)

## சின்னத்தம்பி கனகசபை (சின்ராசு)

ஏரந்தனை, புத்தூர் வடக்கை சேர்ந்த சின்னத்தம்பி கனகசபை நேற்று (08.06.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏரந்தனை,*
*புத்தூர் வடக்கு,*
*புத்தூர்.*

தகவல்:
குடும்பத்தினர்.

(88862)

## தம்பு செல்லத்துரை (போமன்)

சிவலிங்கப்புளியடியைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு செல்லத்துரை நேற்று (08-06-2001) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும் லீலறோஜினி (கொழும்பு), விமலறோஜினி(கொழும்பு), புஸ்பறோஜினி(மாநகரசபை கொழும்பு), சகிலறோஜினி(ப.நோ.கூ.சங்கம், சாவகச்சேரி), லலிதறஞ்சனி (தாதியர் பயிற்சிப் பாடசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜகோபாலு (நில அளவையாளர், சவூதி), இரவீந்திரா (யாழ்.பல்கலைக்கழகம்), கந்தசாமி(கொழும்பு), உதயகுமார் (கொழும்பு), ஆகியோரின் மாமனாரும் பகீரதன், உதயா, குலறஞ்சிதா, மஹிநதன், சர்மிலன், லோகவதனி, கேமிலன், லகுமிகா, பிறேமினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-06-2001) சனிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் காளிகோயிலடி தாவடியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
திருமதி உ.சகிலறோஜினி(மகள்)
*(ப.நோ.கூ.சங்கம் - சாவகச்சேரி)*

*தற்காலிக முகவரி:-*
க.நடராசா,
*காளிகோயிலடி,*
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.*

*நிரந்தர முகவரி:-*
*மீனாட்சி அம்மன் கோயிலடி,*
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.*

(88859)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம
ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை துணை

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷீ வருஷம் வைகாசி மாதம் 28 ஆம் திகதி (11-06-2001) திங்கட்கிழமை பகல் 11.53 முதல் 12.25 மணி வரை வரும் சிங்கலக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
**இ.யோகேஸ்வரன்**
**(அப்பன்)**
அவர்களுக்கும்

எமது புத்திரி
**வ.விஜிதா**
**(விஜி)**
அவர்களுக்கும்

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எல்லோருக்கும் தனிப்பட்ட அழைப்பு வழங்க முடியவில்லை. ஆகவே இந்தப் பத்திரிகை அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சமுகந்தந்து புதுமணமக்களை வாழ்த்தி ஆசீர்வதிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

***தங்கள் நல்வரவை நாடும்:***

**திரு.திருமதி இ.இரத்தினசபாபதி குடும்பம்**
**திரு.திருமதி இ.அன்புராசன் குடும்பம் (ராசன்)**
**திரு.திருமதி இ.றதீஸ் குடும்பம் (ரஞ்சன்)**
*"சந்திரகிரி", 63, அச்சுக்கூட வீதி,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.* (ராசன்)

**திரு.திருமதி சி.வரதராஜன் குடும்பம்**
*1043, கே.கே.எஸ்.வீதி,*
*நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*

(இதுவேட்டார் அழைப்பு)

(88858)

## உதயன்

### வட்டம் சுற்றும் மடத்தனம்!

சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் வியாழக்கிழமை மீண்டும் விடுதலைப் புலிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். நிபந்தனை எதுவும் இல்லாத பேச்சுக்களை நடத்துவதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் முன்வரவேண்டும் என்றும் அவர் பொதுநிகழ்வு ஒன்றில் பேசுகையில் வலியுறுத்தி உள்ளார்....

இந்த வேண்டுகோளும், வலியுறுத்தலும் அரசாங்கம் கடந்த வருடம் நவம்பர் மாதத்துக்கு முந்திய நிலைக்கு திரும்பிவிட்டது என்று எண்ண வைக்கின்றன.

சமாதானப் பேச்சுக்களை நடத்துவதாயின் தமது அமைப்புமீது விதிக்கப்பட்ட தடையை நீக்குவது அவசியம் என்று புலிகள் தெரிவித்ததை அடுத்து கடந்த ஏழு மாத முயற்சி தடைப்பட்டுப் போயுள்ளது. அரசாங்கம் அதற்குத் தயாரில்லை. பேச்சு வார்த்தையைத் தொடங்கிய பின்னரே - அதில் முன்னேற்றம் காணும் கட்டத்திலேயே - தடையை நீக்குவது குறித்துப் பரிசீலனை செய்ய முடியும் என்பது அரசாங்கத்தின் விடாப்பிடியான நிலைப்பாடு.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கிவிட்டுப் பேச்சுவார்த்தை நடத்துவது என்ற விடயத்தில் அரசாங்கத்தரப்பில் இரண்டு கருத்துக்கள் உள்ளன. இந்த இரண்டு கருத்து நிலைமாறி அரசதரப்பினர் சாதகமான ஒரு முடிவுக்கு வருவதற்கு உடனடியாக அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கிவிட்டுப் பேச்சுவார்த்தை நடத்துவதே ஆக்கபூர்வமான - இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய - வழிக்கு இட்டுச் செல்லும் என்ற கருத்து சிங்கள மக்களிடம், அவர்களிடையே உள்ள சமாதான விரும்பிகளிடம் பதிந்துள்ளது.

தென்னிலங்கையில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புகள் ஒன்று சேர்ந்து நேற்று முன்தினம் ஜனாதிபதியிடம் கையளித்த மகஜர், சமாதானப் பேச்சுக்கள் தடங்கல் இன்றி நடைபெற வேண்டும்; இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணவேண்டும் என்ற மேற்படி அமைப்புகளின் கருத்தை மிகத் தெளிவாக எடுத்தியம்புகிறது.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமற்றது; அரசியல் தீர்வே காணப்பட வேண்டும் என்பதனைக் காலம் கடந்தேனும் அரசு உணர்ந்துள்ளது; வெளிப்படையாகச சொல்கிறது. அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகமும் அதனையே சொல்கிறது. பல நாடுகள் அதற்கான அழுத்தத்தையும் கொழும்பு அரசுக்குக் கொடுத்து வருகின்றன.

இத்தகைய ஒரு வேளையில், வடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கமுடியாது என்று அரசாங்கம் அழுங்குப்பிடியாக நிற்கிறது. தொடங்கிய காரியத்தை முன்னெடுத்துச் செனறு வெற்றிகாணவேண்டும் என்ற அக்கறையோ ஆர்வமோ அரசாங்கத்திடம் இல்லை. அத்தகைய கரிசனையும் துடிப்பும் அதனிடம் இருக்குமானால் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதனை ஒரு பாதகமான நடவடிக்கையாக அது கருதமாட்டாது.

எதிரும் புதிருமாக உள்ள இரண்டு தரப்புகள் ஒரே மேடையில் அமர்ந்து சமாதான அல்லது சமரசப் பேச்சுக்களை நடத்துவதற்கு அத்திவாரமாக அமையவேண்டியது, இரு தரப்புகளிலும் பரஸ்பர நம்பிக்கையும் நல்லெண்ணமும் ஆகும். ஆனால் விடுதலைப் புலிகள் மீது நம்பிக்கை வைப்பதற்கு அரசு தயாராக இல்லை.

இரண்டு தரப்புகளும் தீவிரமாகப் போர் புரிந்த வேளையில் கொண்டிருந்த மனநிலையிலேயே, நூறுவீதப் பகைமை உணர்வுடனேயே, அரசாங்கம் இப்போதும் உள்ளது. போரில் களைத்துப்போய் நோர்வேயிடம் அனுசரணை கேட்டதனை மறந்து, 2000 நவம்பருக்கு முந்திய நிலைக்கு வட்டம்போட்டு வந்திருக்கிறது அரசு. இவ்வாறு வட்டம் சுற்றுவதனை அரசு தனது மதியூகம் என்று எண்ணுமாயின் அதனைவிட அரசியல் மடத்தனம் வேறு எதுவும் இருக்க இயலாது.

# கிளிநொச்சி நகரப் பகுதியில் அலுவலகங்கள் இயங்குகின்றன

வவுனியா,ஜூன்9

கிளிநொச்சி நகரப் பகுதியில் இருந்து ஸ்கந்தபுரத்துக்கு இடம் பெயர்ந்த அரச செயலகம் மற்றும் அரச அலுவலகங்கள் நான்கு வருடங்களின் பின்னர் மீண்டும் பழைய இடங்களில் இயங்க ஆரம்பித்துள்ளன.

அரச செயலகம் கடந்த திங்கட்கிழமை முதல் பழைய இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

ஏனைய பல அலுவலகங்களும் படிப்படியாகப் பழைய இடங்களுக்குத் திரும்பி இயங்கத்தொடங்கி உள்ளன என்றும் கிளிநொச்சி செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி செயலகம் உட்பட பெரும்பாலான அரச அலுவலகங்களின் கட்டடங்கள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன என்றும் - திருத்தக்கூடிய நிலையில் உள்ள கட்டடங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன என்றும் -

ஏனைய அலுவலகங்களுக்கு தற்காலிகக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் -

அவர் மேலும் சொன்னார்.

1996ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையின் போது நகரப் பகுதியில் உள்ள கட்டடங்கள் சேதமடைந்திருந்தன.

அங்கு கட்டடங்கள் திருத்தப்படாததாலும் - அப்பகுதியில் மிதிவெடி அபாயம் இருந்ததாலும் அரச அலுவலகங்கள் தொடர்ந்து இடம் பெயர்ந்த இடங்களிலேயே செயற்பட்டுவந்தன.

(ஐ-3)

## நேற்று அதிகாலை சம்பவம்

# நல்லூரில் இரு கடைகளில் ஒரே சமயத்தில் திருட்டு!

நல்லூர்,ஜூன்9

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் முன்பாகவுள்ள இரண்டு கடைகள் உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

முதலில் அங்கு உள்ள மருந்துகள் விற்பனை நிலையத்தின் கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த பால்மா மற்றும் மருந்துப் பொருள்களைத் திருடிய திருடர்கள் கடையின் பின் கதவை உடைத்து அதனூடாக அங்குள்ள புடைவைக் கடைக்குள் நுழைந்து ஆடை வகைகள் மற்றும் கொடுப்பனவுக்காக வைக்கப்பட்டிருந்த பணம் உட்பட வேறும் சில பொருள்களையும் சூறையாடியுள்ளனர்.

இரு கடைகளிலும் திருட்டுப்போன பொருள்களின் பெறுமதி குறித்து சரியான மதிப்பீடு உடனடியாகக் கிடைக்கவில்லை. உத்தேச மதிப்பீட்டின்படி சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருட்டு இடம்பெற்ற சமயம் அப்பகுதியில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் கடமையில் இருந்துள்ளனர்.

நல்லூர் பகுதியில் இப்போது அடிக்கடி திருட்டுச் சம்பவங்கள் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-111)

### புனரமைக்கப்படாத நிலையில் வீதி

காரைநகர் களபூமி - பொன்னாவளை வீதி கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாமல் மிக மோசமாகச் சேதமடைந்த நிலையில் உள்ளது.

மழை நாள்களில் வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் அப்பாதை ஊடாகப் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து ஆறு வருடங்கள் கடந்த நிலையிலும் இந்த வீதியைத் திருத்துவதற்கு உரிய திணைக்களங்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-73)

# நெடுந்தீவு வாடிவீடு விரைவில் புனரமைப்பு

நெடுந்தீவு,ஜூன்9

நெடுந்தீவு மாவலித்துறையில் அமைந்துள்ள வாடிவீடு விரைவில் புனருத்தாரணம் செய்யப்படும்.

பிரதேச சபைத் தலைவர் அ.வெ. அரியநாயகம் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக குறிப்பிட்ட வாடிவீடு இயங்காதுள்ளது. அண்மைக் காலங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களுக்கு இலக்காகிச் சேதமுற்றும் காணப்படுகின்றது.

வெளியிடங்களில் இருந்து வருவோர் தங்கிச் செல்ல வசதியாக இதனைப் புனரமைக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் தற்போதுதான் அதனைப் புனரமைப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வாடிவீட்டுக்கென புதிய கட்டடம் அமைப்பதற்கென புனரமைப்பு வேலைத்திட்ட அடிப்படையிலான ஒதுக்கீட்டின் கீழ் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனர்மைப்பு அமைச்சு 10 லட்சம்ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளதாகவும் கூறப்பட்டது.

(ஐ-111)

### மகா சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்9

கலட்டி, எச்சாட்டி ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலய மகாசபைக் கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ம-10)

# மீனவருக்கு மிகத் தரம் குறைந்த வலைகள் விநியோகம்

இந்த வருடம் குடாநாட்டு மீனவர்களுக்கு மானிய அடிப்படையில் வழங்கப்பட்ட மீன்பிடி வலைகள் மிகவும் தரம் குறைந்தவை என்று மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மீனவர்களுக்கு மானிய அடிப்படையில் வழங்குவதற்கென அண்மையில் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த வலைகள் நீண்டகாலம் பயன்படுத்தமுடியாத, தரம்குறைந்த வலைகள் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

ஒவ்வொரு கடற்றொழிலாளர்களுக்கும் 8 ஆயிரம் ரூபா பெறுமதியிடப்பட்ட வலைகள் 4 ஆயிரம் ரூபாவுக்கு விறபனை செய்யப்படுவதாகவும் மிகுதி 4 ஆயிரம் ரூபா மானியமாக விடப்படுவதாகவும் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் தெரிவித்துள்ளார். ஆனால் இவ்வாறு வழங்கப்படும் வலைகள் கடைகளில் 4 ஆயிரத்து 800 ரூபாவுக்கே விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

### நாளை

வைகாசி 27
ஞாயிற்றுக்கிழமை
திதி: சதுர்த்தி
நண்பகல் 12.11 வரை.
நட்சத்திரம்: திருவோணம்
முழுநாளும்
சுபநேரம் : 8.52 - 10.22
ராகுகாலம் : 4.22 - 5.52
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சரிவர ஒரு காரியத்தை முடிக்க வேண்டுமானால் அதை நீயே செய்; பிறரிடத்தில் ஒப்படைக்காதே.

# நாட்டு நடப்பு

'ரமில் டே' - II

இங்கிலீசில் தமிழ் பற்றி எழுதி
இரவு பகலாய்ச் சப்பித்துப்பி
அங்கிள் அன்ரி அதிதி யாய் அமர
அரை குறை தமிழில் வரவேற்று
பேராசிரியர் 'சூட்' 'ரை' யோடு வந்து
பேருரையை ஆங்கிலத்தில் நிகழ்த்த
தீராது தமிழ் மோகமென்ற
திருப்புகழோடு முடிந்தது கூட்டம்.

*- விகடகவி -*

# பதினொன்றும் பெற்ற பெருவாழ்வு

ஆண்களின் காற்சட்டை மேற்சட்டைகளில்தான் எவ்வளவு நாகரீகமும் முன்னேற்றங்களும் புகுந்துகொண் [illegible] தலில் மேற்சட்டையாகிய சேர்ட்டை எடுத்துக்கொள்வோம்.

நாம் படிக்கின்ற அந்தக் காலத்திலெல்லாம் இந்தச் சேர்ட்டையும் பெனியன், ரீசேர்ட் அணிவதுபோலத் தலையாலைதான் போடவேண்டும். அப்படிப் போட்டபின் மார்புப் பகுதியில் உள்ள மூன்று நான்கு 'ஸ்ரட்'களையோ தெறிகளையோ பூட்டவேண்டும். 'ஸ்ரட்' என்பது 'டிக்' என்ற சத்தத்துடன் பொருத்தக்கூடியது. 'ஸ்ரட்' மறைந்து வந்தாலும் தெறி என்பது இன்றும் இருப்பதுதானே! சேர்ட்டுகளும் கீழ்ப் பகுதியில் முன்னும் பின்னுமாக அரை வட்டமாக முடியும் ஒரு ரகமும், மட்டமாக முடிவதுமான இன்னொரு ரகமும்தான். நீட்டுக்கை சேர்ட்டை முழங்கை வரை மடித்துவிடும் வழக்கம் எல்லாம் பின்னால் வந்தவை.

காற்சட்டையை எடுத்துக்கொண்டால் இப்போதுள்ள 'சிப்ற்' முறையும் முன்பக்க நாடாவை இடுப்புப் பகுதியிலுள்ள தடையில் இழுத்துக்கொழுவும் முறையும் இல்லை. அப்போதெல்லாம் சிப்றுக்குப் பதிலாக மூன்று நான்கு பட்டன்களைத்தான் வேறாக வாங்கிப் பொருத்த வேண்டும். இந்தப் பட்டன்கள் என்பது மரப்பலகையில் வடிவமைக்கப்பட்ட இணைக்கப்பட்ட சில்லுகள் போன்றவை. (கேபிள் கம்பிகள் சுற்றிவருகின்ற றீல் கட்டைகள் போன்றவை ~ ஆனால் சிறியவை) இந்த பட்டன்களை காற்சட்டையில் 'சிப்ற்' பொருத்துகின்ற இடங்களில் எதிரெதிராகவுள்ள துவாரங்களில் இணைக்க வேண்டும். வயிற்றின் வலது பக்கத்தில் மட்டுமல்ல இடுப்பின் இடது பக்கத்திலும் ஒரு பின்னோக்கிய நாடா இருக்கும். இதே போல பின்பக்கத்திலும் பக்கத்துக்கொன்றாக முன்நோக்கிய நாடாக்கள் இருக்கும். முன்பக்க நாடாவையும் பின்பக்க நாடாவையும் இணைப்பதற்கு உலோகத்திலான சன்னல் சட்ட வடிவிலான முட்கிளிப்புகளும் தேவை. அந்தக் கிளிப்பை முன்பக்க நாடாக்களில் பொருத்துவதற்கு பட்டன்தான் வேண்டும். காற்சட்டையை அணிந்து பட்டன்களையும் பொருத்தி நாடாக்களையும் இழுத்து இணைத்த பின்னர் தாம் நாம் காற்சட்டைக்காரர்.....

**நினைக்க.... ....சிந்திக்க**

இந்த மரப்பட்டன்களுக்குப் பதிலாக வசதிபடைத்த மாணவர்கள் உலோகத்திலான வெள்ளி ~ பித்தளை பட்டன்களையும் பாவிப்பார்கள். சுருக்கமாகச் சொல்வதானால் காற்சட்டை என்று ஒன்று இருந்தால் அதற்குப் புறம்பாக இந்தப் 'போட்டுக் கழற்றுகின்ற' உதிரிப்பாகங்களும் கைவசம் இருக்கவேண்டும். இந்தப் பட்டன்களுக்குப் பதிலாக வளர்ச்சியின் ஒருபடியாக இடையில் தெறிகளும் பயன்பட்டு உதிரிப்பாகங்களின் சுமையைக் குறைத்ததுண்டு.

இவையெல்லாம் அரைக் காற்சட்டைகளுக்கு மட்டுமல்ல 'லோங்ஸ்' நீளக் காற்சட்டைகளுக்கும் பொருந்தும். அப்பொழுதெல்லாம் 'லோங்ஸ்' அணிபவர்கள் மிகச் சிலராகத்தான் இருந்தார்கள். மேற்படிப்பு, அரசாங்கவேலை என்று வந்ததும் தான் அதனை அணிவார்கள். 'லோங்ஸ்' அணிவதென்றால் அதற்கு அடிப்படைத் தகுதியாக ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும் ~ என்பது அக்கால வழக்கமாக இருந்தது..... ஆனால் அரைக் காற்சட்டைகளுக்கு 'அது' அவசியமில்லை.

பாடசாலைகளைப் பொறுத்தவரை கூட ஆங்கில ஆசிரியர்கள்தான் நீளக் காற்சட்டை அணிவார்கள். மற்றவர்கள் அநேகமாக தேசிய உடைகள்தான் அணிந்து வருவார்கள். இன்னும் ஆங்கிலத்தில் மிகுந்த புலமையுள்ள சிலர்கூட தங்கள் தேசிய உணர்வைக் காட்டிக்கொள்வதற்காக நாஷனல் வேட்டியுடன்தான் காட்சியளிப்பார்கள்.

இப்பொழுதும் இந்தத் தேசியப்பற்று இல்லாமல் இல்லை. தென்னிலங்கையில் அதுவும் முக்கியமாக கலைஞர்கள் அதற்கு முன்னுரிமை கொடுப்பதைக் காண்கின்றோம். முக்கிய நிகழ்ச்சிகளில் அவர்கள் முற்றாக இல்லாவிட்டாலும் நாஷனல் பாதி காற்சட்டை பாதியாகக் காட்சி தருகிறார்கள். இன்னும் சிலர் இன்னும் ஒருபடிமேலே போய் தேசிய உடையான நாஷனலை எவ்வளவுக்கு எவ்வளவு நீட்ட முடியுமோ அவ்வளவுக்கு நீட்டியும் (அதாவது முழங்கால் வரை அல்லது அதற்கும் கீழ்) ஆங்கில உடையை எவ்வளவு மறைக்க முடியுமோ அவ்வளவு மறைத்தும் தங்கள் தேசிய உணர்வை ஒல்லும்வகை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

நல்லது; வரவேற்கவேண்டியதுதானே.....!

*- சண் அங்கிள்.*

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



காய்த்துக் குலுங்கும் பழமரங்கள் ஆனால் அவை நிற்கும் இடங்கள் மிதிவெடிகள் இருக்கும் பிரதேசம். பழம்பறிக்கப் போய்க் காலை இழந்து தவிப்பதா? வேண்டாம்! அங்கே போகவேண்டாம்!

# கவுணாவத்தை ஆலயத்தில் இன்று பெரும் வேள்வி!

## ஆடுகள், கோழிகள் பலியிடப்படும்!

வலி. வடக்கு, ஜூன் 9

கருகம்பனை கவுணாவத்தை வயிரவர் ஆலயத்தில் இன்று அதிகாலை இடம்பெறும் மடையைத் தொடர்ந்து பெரும் வேள்வி நடைபெற விருக்கிறது.

நூற்றுக்கணக்கான ஆடுகளும், கோழிகளும் இன்று அந்த ஆலயப் பகுதியில் பலியிடப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

வருடாந்தம் இந்த ஆலயத்தில் வேள்வி இடம்பெற்று வருகிறது. சென்ற ஆண்டும் இங்கு பெரும் எண்ணிக்கையான ஆடுகள் பலியிடப்பட்டன.

இந்த முறை பொங்கல் மடையை ஆலயப் பகுதியில் நடத்தப் படையினர் அனுமதி வழங்கி உள்ளனர் ஆனால் ஆலயப் பகுதிக்கு வாகனங்கள் கொண்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டது.

இன்று கவுணாவத்தை ஆலய வேள்விக்குச் செல்பவர்கள் மலையடைப்பு அண்ணமார் கோயில் வீதி, மயிலங்கூடல் ஞானவைரவர் ஆலய வீதி வழியாக கோயிலுக்குச் செல்ல முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ–86)

## திரைப்படக் காட்சி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு கே. பாலசந்தரின் 'அச்சமில்லை அச்சமில்லை' என்ற திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

புவியியல்துறை மண்டபத்தில் திரையிடப்படவுள்ள இத் திரைப்படத்தை ஆர்வமுடையவர்கள் அனைவரும் பார்வையிடலாம் என்று புறநிலைப் படிப்புகள் அலகு இயக்குநர் அறிவித்துள்ளார். (ஐ–6)

# நாவாந்துறை சூரியவெளியில் மக்கள் மீளக்குடியமர அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 9

நாவாந்துறை சூரியவெளிக் குடியேற்றத்திட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீளக்குடியமரப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

அந்தப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த 35 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தம்மை மீளக்குடியமர ஏற்பாடு செய்யும்படி யாழ். மாநகரசபையின் ஈ.பி.டி.பி உறுப்பினர் துரைரசா இளங்கோ நீகனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதைத்தொடர்ந்து அந்தக் குடும்பங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்தும் கோரிக்கை விடுத்தன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 512 ஆவது படையணித் தளபதியுடன் இதுவிடயமாகக் கலந்துரையாடிய தன் பேரில், அந்தப்பகுதி மக்கள் மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் அங்கு சென்ற படை அதிகாரிகள் மற்றும் அப்பகுதிக் கிராம சேவையாளர், ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் ஆகியோர் மக்கள் அங்கு மீளக்குடியமர்வது குறித்து விரிவாக ஆராய்ந்தனர். (ஐ-3)

# அபிவிருத்தித் தொண்டர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ். மாவட்டத்தில் நியமனம் பெற்றுள்ள ஆயிரத்து 500 அபிவிருத்தித் தொண்டர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு நேற்று முன்தினமும் நேற்றும் வழங்கப்பட்டது.

வடக்கு — அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு — கிழக்கு தமிழ் விவகார அமைச்சின் அலுவலகத்தில் வைத்து இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டது,

ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளரும் நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவருமான சு. மணிபல்லவராஜனும், வலி. மேற்குப் பிரதேசசபைத் தலைவர் என். திரிலோகநாதனும் இந்தக் கொடுப்பனவு வழங்கும் பணியில் ஈடுபட்டனர். (ஐ–3)

# கைலாசபதியின் சிந்தனைகள்

# சாதகர்க்கு இனிய வழித்துணை

அறிஞர் பொ. கைலாசபதியின் 99 ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று ஜூன் மாதம் ஒன்பதாம் திகதியாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

உப அதிபர் பொ. கைலாசபதி அவர்களின் சிந்தனைகள் விவேகிகளுக்குச் சிறந்த விருந்தாகவும் புத்தகப் பூச்சிகளுக்குப் பெரும் சவாலாகவும் அதே சமயம் நல்லார்வமுள்ள சாதகர்க்கு இனிய வழித்துணை போலவும், வழுக்கி விழும் நிலையில் உதவும் ஊன்றுகோல் போலவும் பயன் செய்கின்றன.

காந்தியச் சிந்தனைகள், பொது உடைமைக் கோட்பாடுகள், சோசலிசக் கவர்ச்சிகள், ஜனநாயக விழுமியங்கள் என்பன இக்காலச் சாதகர்கள் சாஸ்திர விசுவாசம் கொள்ள இயலாத வண்ணம் குழப்பியடிக்கின்றன. இவற்றால் கவரப்பட்ட பலர் நெறியல்லா நெறிகளையே அம்பிக்கையானவை எனக் கொள்ளும் நிலை உள்ளது. இப்படியான நெருக்கடிகளில் அகப்பட்ட அப்பாவிகளான சாதகர்களுக்கு இனிய கலங்கரை விளக்கம் போல, பொ.கை. சிந்தனைகள் பல உள்ளன. இது உலகம் முழுவதையும் தனது சந்நிதி மாத்திரையில் இயங்கும் பரம்பொருளின் தீர்மானமான திட்டத்தின் சிறப்பு என்றே கொள்ள வேண்டியுள்ளது.

வருணாச்சிரம அடிப்படைகளின் உண்மை, அறம். பொருள், இன்பம், வீடு என்ற ஒழுங்கின் நுட்பம், உயர்ந்த கொள்கைகளில் சுயநலம் புகுந்து விளையாடும் தன்மை முதலிய பல விடயங்களில் பொ.கை. சிந்தனைகள் கடவுளின் வரப்பிரசாதமாக உள்ளன.

வருணம், ஆச்சிரமம் என்பன இப்போது குழம்பிய நிலையில் உளளபடியால், இக்காலத்தவர் அவற்றை ஒதுக்கிச் செயற்படலாம் என்ற காந்தியின் கோட்பாடும் இவை தேவையற்றவை என்னும் பிற கோட்பாடுகளும் பொ.கை. அவர்களின் சிந்தனைகளால் நன்கு பரிசீலிக்கப்பட்டு இலட்சிய வருணாச்சிரமச் சிறப்பும் அவசியமும் தெளிவாக்கப் பட்டுள்ளன. இவையின்றி ஒருவன் ஆன்மீக வளர்ச்சியடைவதில் உள்ள சிரமங்கள் உணர்த்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு சாதகனும் தன்னுடைய நிலை உண்மை வருணத்தில் எது ஆச்சிரமத்தில் என்று அறிந்து மேல்நிலையடையப் பாடுபட வேண்டும் என்னும் உண்மை பொ.கை. சிந்தனைகளில் அழகாக, தெளிவாக உள்ளது.

தம் மனசறியத் தவறுசெய்யும் பெரும்பாலானவர்கள் சந்தர்ப்பம் சூழ்நிலைகளைக் காரணமாக்கி, சமாதானப் படுகின்றனர். தம்மைப்போன்றவர்கள் முன் தாம் நியாயமான, சரியான செயற்பாடு



உடையவர்களே என்று நிறுவி நிம்மதியடைகின்றனர். கொலைகளில் பெரிய கொலை அறிவுக் கொலை. மிகக் கொடிய கொலை, கொன்று பிணமாக்கிய அறிவு ஒருவனை உயர்த்துவது எங்ஙனம் என்ற கருத்தை உடைய பொ. கை. சிந்தனை இப்படியானவர்களின் மனச்சாட்சியை விழிப்புறச் செய்து அவர்கள் கூறும் சமாதானங்களில் உள்ள ஓட்டையைப் பெரிதுபடுத்திக் காண்பிக்கிறது. அரசையும் மனைவி பிள்ளையையும் இழந்த பின், இறந்தது தன் மகனே, மகனைச்சுடுகாட்டுக்குக்கொணர்ந்தது தன் மனைவியே என்று அறிந்த பின்னும், சத்தியத்தில் அணு அளவும் பிசகாது செயற்பட வேண்டுமேயன்றி சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் காரணமாக்கி அறிவுக் கொலை செய்யலாகாது என்று கூறுகின்றது. தீமைக்குக் காரணம் ஆணவத்தின் குணமாகிய அறியாமையும், கர்மசந்தர்ப்பங்களுமே என்று சொல்லித்தப்புவது தவறு. விருப்பு, வெறுப்புக்கு அத்காரி ஆத்மா.

ஒரு காவியப்புலவன் சிறந்த நகைச்சுவை ஒன்றைக் கூறும்போது அதை உணர்ந்து யாராவது சிரிக்காமல் இருந்தால் அது புலவனின் குற்றமன்று என்ற கருத்தை பண்டிதமணி சி. க. ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இக் கருத்துக்கு அமைய பொ. கை. கருத்தென்று அழகிய நகைச்சுவையாக உள்ளது.

உலகமே பொய் என்று சொல்லும் மாயாவாதி அந்த உலகிலேயே தன்னைத் தாபிக்க முயலுகின்றான் என்ற கருத்துடைய பொ. கை. சிந்தனை மிக உச்சமான நகைச்சுவையாகும். நகைச்சுவைப்பாணியில் மிக வில்லங்கமான விடயத்தை பொ. கை. அழகாகக் கூறியிருக்கிறார். இச்சிந்தனையை முதன் முதல் வாசித்தபோது, இதுவரை காலமும் இப்படியாக ஏன் ஒருவரும் அணுகவில்லை என்று கருதியதுண்டு. ஆனால் இச்சிந்தனை பகிரங்கமான பின்னரும் இதனைக் கற்றவரும் கல்லாதவரும் எனப் பலர் மாயாவாதத்தை இரசித்துக் கொண்டும் பிரசாரம் செய்து கொண்டும் மாயாவாதத்தை வியந்து ஏற்றுக் கொண்டும் இருப்பது ஒரு பிரபஞ்ச விசித்திரம் என்றே கருதவேண்டியுள்ளது.

நாவலர் பெருமானின் உயர் தகுதி, திருஞானசம்பந்தர், அகத்தியர் போன்றோரின் மேல்நிலை, காந்தி — ஜேசுநாதர் போன்றோரின் நிலைப்பாடுகள் எனப் பலவிடயங்களிலும் தீட்சை, மந்திரம், உபதேசம் முதலிய பல விடயங்களிலும் பொ. கை. சிந்தனை எவ்வாறு விளங்குகின்றது என்பதை நம்மவர் அனைவரும் அறியும் நிலை உருவாக வேண்டும். ''விழித்திருந்து உள்ளக் கருத்தினை இழந்தேன்'' என்ற மாணிக்கவாசகத்திற்கு உதாரணமாக பொ. கை. சிந்தனைகள் இருந்தும் அவற்றினை பயன் இழக்கும் நிலை நம்மவர்க்கு ஏற்படலாகாது.

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 9

அளவெட்டி பொ. கைலாசபதியின் 99 ஆம் பிறந்த தினத்தை நினைவு கூரும் வகையில் 'மௌனதவ முனிவர் பொ. கைலாசபதியின் வாழ்வும் சிந்தனையும்' என்னும் நூலின் வெளியீட்டு விழா இன்று அளவெட்டியில் இடம்பெறவுள்ளது. (ஐ–3)

## கூட்டம்

ஊரெழு கணேச வித்தியாசாலை பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை ஞாயிறு காலை 10—00 மணிக்கு வித்தியாசாலை பொது மண்டபத்தில் நடைபெறும். (ஐ-17)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக மன்னார் மாவட்ட மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு நல்லாயன் நிலையத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் மன்னார் மாவட்ட மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மாணவர் ஒன்றியத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (ஐ–6)

## சமய சந்நிதியில்

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை ஒட்டி இன்று காலை 7 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை எண்ணெய்காப்பு இடம்பெறும். (ஐ-3)

★ ★ ★

குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயம் புரைமைக்கப்பட்டு மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.53 மணிக்கு நடைபெறவுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் ஆரம்பமான கிரிகையகளை சிவாகம கிரியாபானு சிவஸ்ரீ ந. உருத்திரமூர்த்திக் குருக்கள் தலைமையிலான அந்தணர்கள் நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரையும் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (ஐ-10)

★ ★ ★

நயினாதீவு பிடாரி அம்பாள் ஆலய வருடாந்த வேள்வி உற்சவம் இன்று சனிக்கிழமை நடைபெறும். (ஐ–117)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





**சரவணமுத்து வல்லிபுரம்**

தோற்றம்: 07 - 12 - 1944 மறைவு: 22 - 05 - 2000

**வல்லிபுரம் வதனி**

தோற்றம்: 05 - 05 - 1989 மறைவு: 22 - 05 - 2000

திதி: சதுர்த்தி

உங்கள் பிரிவை எங்களால் தாங்க முடியவில்லை!
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, சகோதரி, உற்றார், உறவினர்.

கச்சாய் தெற்கு, கொடிகாமம். [88761]

நடு வானில் பறந்த வேளை

# வில்லியம் ஹேக்கின் ஹெலி அதிர்ஷ்ட வசமாகத் தப்பியது!

லண்டன்,ஜுன்9

பிரிட்டனில் நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த சமயம் கடந்த செவ்வாயன்று - ஏற்பட இருந்த ஹெலி விபத்து ஒன்றில் இருந்து கென்சர்வேர்டிவ் கட்சித் தலைவர் வில்லியம் ஹேக் மயிரிழையில் தப்பியதாக லண்டனில் இருந்து வெளியாகும் 'சண்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.



தேர்தல் பிரசாரத்துக்காக வில்லியம் ஹேக் சென்று கொண்டிருந்த ஹெலி நடுவானில் இராணுவ பயிற்சிக் ஹெலி ஒன்றுடன் நேருக்கு நேர் மோத இருந்த சமயம் ஹேக் சென்ற ஹெலியின் விமானி சாதுரியமாகச் செயற்பட்டு அந்த விபத்தை தவிர்த்ததாகவும் -

விமானியின் கடைசி நிமிட சாதுரிய நடவடிக்கையே ஹேக்கை உயிர் தப்பச் செய்ததாகவும் -

அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (ம)

அமெரிக்க முயற்சி வெற்றி

# இஸ்ரேல்-பலஸ்தீனம் இடையே பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பம்

ஜெருசலம்,ஜுன்9

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று இஸ்ரேல் தலைநகர் ரெல்அவிவில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 20 பேர் பலியான சம்பத்தின் பின்னர் இடம்பெற உள்ள முதலாவது சமாதானப் பேச்சு இதுவாகும். இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மிக மோசமடைந்திருந்தன.

இதனை அடுத்து உறவுகளை சீர்ப்படுத்தும் முயற்சியில் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏயின் தலைவர் ஜோர்ஜ் கெனத் ஈடுபட்டிருந்தார். தற்போது அவர் தனது முயற்சியில் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் பிரதம ஏரியல் ஷெரோன் மற்றும் பலஸ்தீனத் தலைவர் யசிர் அரபாத் ஆகியோரைச் சந்தித்துப் பேசிய பின்னர் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தம் எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் மூலம் எட்டு மாதங்களாகத் தேங்கிக் கிடந்த சமாதான முயறசிகள் மீண்டும் உத்வேகம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

# பலஸ்தீனர்களின் பிடியிலிருந்து இஸ்ரேல் செய்தியாளர் தப்பினார்

ஜெருஸலேம்,ஜுன்9

இஸ்ரேலிய செய்தியாளரான யூஸுப் சாமிர் பலஸ்தீனர்களின் பிடியில் இருந்து தப்பிவந்துள்ளார்.

இரு மாதங்களுக்கு முன்னர் இவர் பெத்ஹேமில் வைத்து பலஸ்தீனர்களால் கடத்தப்பட்டார். இவர் காணாமற்போன பின்பு ஹிஸ்புல்லா இயக்கத்திடமிருந்து ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்துக்கு வந்த தகவலில் தாங்களே சாமிரை கடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பலஸ்தீனர்களால் சிறைவைக்கப்பட்டிருந்த சாமிர் ஒருவாறு அங்கிருந்து தப்பி வந்ததாக கூறப்பட்டது.

இவர் இஸ்ரேல் வானொலி ஒன்றின் அரபு மொழிப் பிரவில் கடமையாற்றுபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில்

# தொழிற்கட்சி பெரு வெற்றி

## மீண்டும் பிளயர் பிரதமர்

லண்டன்,ஜுன்9

**நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்த பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தேர்தலில் தொழிற்கட்சி மீண்டும் பெரும் வெற்றியீட்டியுள்ளது. 659 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்துக்கு நடத்தப்பட்ட இந்தத் தேர்தலில் நேற்று நண்பகல் வரை 589 இடங்களுக்கான முடிவுகள் வெளியாகின. இவற்றில் 402 இடங்களை பிரதமர் ரொனி பிளயரின் தொழிற்கட்சி பெற்றுள்ளது.**

தேர்தல் முடிவுகளின் படி கென்சர்வேட்டிவ் கட்சி 146 இடங்களையும் லிபரல் கட்சி 41 இடங்களையும் பெற்றுள்ளன. மிகுதி 70 இடங்களுக்குமான முடிவுகள் நேற்றிரவே வெளியாகிவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.



வெற்றிக் களிப்பில் ரொனி பிளயர்

தொழிற்கட்சியின் பெரும் வெற்றியை அடுத்து ரொனி பிளயர் இரணடாவது தடவையாகவும் பிரிட்டிஷ் பிரதமராக பதவி ஏற்கவுள்ளார்.

தனது கட்சி நாடாளுமன்றில் அறிதிப் பெரும்பான்மையைப் பெறும் நிலையை எட்டியுள்ளதை அடுத்து நேற்று செய்தியாளர்களிடம் பேசிய ரொனி பிளயர் -

கட்சியின் நூறு ஆண்டு கால வரலாற்றில் முதற் தடவையாக தொடர்ந்து இரண்டாவது பதவிக்காலத்துக்கும் ஆட்சிப்பீடம் ஏறும் நிலை ஏற்பட்டுள்ளது. இது ஒரு சாதாரணமான விடயம். இதற்காகவே நாம் நீண்ட காலமாகப் பாடுபட்டு வந்துள்ளோம் - என்றும் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ரொபின் குக், துணைப் பிரதமர், ஐரோப்பாவுக்கான அமைச்சரும் அமைச்சரவையின் ஒரே ஆசியப் பிரதிநிதியுமான கேஸ் வேர்க் ஆகியோர் தேர்தலில் வெற்றி பெற்ற முக்கியஸ்தர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இந்தியாவைச் சேர்ந்த இந்துஜா சகோதரர்களிடம் நிதி பெற்ற குற்றச்சாட்டின் பேரில் பிளயர் அமைச்சரவையிலிருந்து பதவி விலகிய பீற்றர் மாண்டர்சனும் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.

தொழிற்கட்சி வெற்றிபெற்றதை அடுத்து பிரிட்டனில் உள்ள குடியேற்ற வாசிகள் நிம்மதியடைந்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தஞ்சம் கோருவோருக்கு எதிரான சட்டங்களை கடுமையாக்கப்போவதாக பிரசாரத்தின் போது கென்சர் வேட்டிவ் கட்சி தெரிவித்து வந்ததே இதற்கு காரணம். (ம)

230 ஆண்டுகளின் முன்னர்

# ஷா வம்சம் அழியுமென்று தெய்வம் இட்ட சாபம்

நிறைவேறியதாக மக்கள் நம்பிக்கை

நேபாளத்தின் ஷா மன்னர் பரம்பரை, 10ஆவது தலைமுறையுடன் அழிந்து விடும் என்று 230 ஆண்டுகளின் முன்னர் இடப்பட்ட சாபம் தற்போது பலித்துள்ளதாக நேபாளியர்கள் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கை குறித்துக் கூறப்படுவதாவது:-

பல சிற்றரசுகளாக சிதறிக்கிடந்த நேபாளத்தை ஒரு குடையின் கீழ்க் கொண்டு வந்தவர், ஷா அரசவம்சத்தின் முதன் மன்னரான பிரிதிவி நாராயன் ஷா. இவர் 1768ஆம் ஆண்டில் நேபாள மன்னரானார். பல சிற்றரசுகளையும் வென்று மாமன்னராக காத்மண்டு பள்ளத்தாக்குக்குள் மன்னர் பிரிதிவி நுழைந்த போது, அவரை காவல் தெய்வமான கோரக்நாதர், துறவி உருவில் வழிமறித்து உணவு கேட்டாராம். தன்னிடமிருந்த தயிரை மன்னன் கொடுக்க, அதணைப் பருகிய துறவி, அருந்தியதை வெளியே கக்கி, அதனை உண்ணும்படி மன்னனிடம் கொடுத்தார்.

இதனால் ஆத்திரமடைந்த பிரிதிவி மன்னன் எச்சில் தயிரை எறிந்தான். ஆனால் அது மன்னனின் காலில் விழுந்து விரல்களை மூடியது. அப்போது சுயரூபம் பெற்ற கோக்ரநாதர், "மன்னா, நீ அந்தத் தயிரை உண்டிருந்தால், நீ கேட்ட வரத்தைத் தந்திருப்பேன். ஆனால் நீ ஆத்திரத்தில் அறிவிழந்து, நீ வீசியெறிந்த தயிர் கால் விரல்கள் பத்தையும் மூடியதால், உன் வம்சம் 10 தலைமுறைகளுடன் அழிந்துவிடும்" என்று சாபமிட்டார்.

மறைந்த மன்னர் பிரேந்திரா, ஷா வம்சத்தின் 10ஆவது தலைமுறையையும், அவரைச் சுட்டுக் கொன்றதாகக் கூறப்படும் பட்டத்து இளவரசர் திபேந்திரா 11ஆவது தலைமுறையையும் சேர்ந்தவர்கள் என்பதால் தெய்வ சாபம் பலித்ததாகவே நேபாளியர்கள் நம்புகிறார்கள். (ஓ)

# மன்னர் குடும்பக் கொலைகள் குறித்து விசாரணைகள் ஆரம்பம்

காத்மண்டு,ஜுன்9

நேபாள மன்னர் குடும்பத்தவர்கள் கொல்லப்பட்ட அரண்மனைப் படுகொலைகள் தொடர்பாக விசாரிப்பதற்கு என புதிய மன்னர் ஜியானேநதிராவால் நியமிக்கப்பட்ட உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான விசாரணைக் குழு தனது விசாரணைகளை நேற்று ஆரம்பித்தது.

மூன்று நாள்கள் விசாரணை நடத்தும் இந்தக் குழு, இறுதியில் தனது அறிக்கையை மன்னரிடம் சமர்ப்பிக்கும்.

மன்னர் குடும்பத்தவர்கள் படுகொலை செய்யப்பட்ட இடத்தைப் பார்வையிடல், உயிர் தப்பியவர்களிடம் இருந்து வாக்கு மூலம் பெறுதல், துப்பாக்கிக் குண்டுகளின் சிதறல்களைச் சோதனை செய்தல் ஆகியவை விசாரணைக் குழுவின் முக்கிய பணிகளாக இருக்கும்.

சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் விசாரணைக்குழு முன் தெரிவிப்பதை மட்டுமே குழு ஏற்றுக் கொள்ளும்; அவர்கள் பத்திரிகையாளர்களிடம் தெரிவிப்பதை நாம் கருத்தில் எடுக்கமாட்டோம் என்று விசாரணைக் குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

# சிகரெட் நிறுவனத்துக்கு எதிராக அமெ. புற்று நோயாளி வழக்கு

300 கோடி டொலர் நஷ்டஈடு செலுத்த நீதிமன்று உத்தரவு

லொஸ் ஏஞ்செல்ஸ்,ஜுன்9

சிகரெட் பிடித்ததால் புற்று நோய்க்கு ஆளான ஒருவருக்கு 300 கோடி டொலர் நட்டஈடு செலுத்த வேண்டும் என்று அமெரிக்க நீதிமன்றம் பிரபல சிகரெட் நிறுவனம் ஒன்றுக்கு உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்கரான ரிச்சர்ட் பூச்சன் என்பவர் தான் புற்று நோயால் பாதிக்கப்பட்டதற்கு 'பிலிப் மொரிஸ்' சிகரெட் நிறுவனத்தின் சிகரெட்களை காரணம் என்றும் -

புகைத்தலால் நேரும் கேடுகள் குறித்து 40 வருடகாலமாகப் பொய்யுரைத்து வந்ததாகவும் - தெரிவித்து நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

மனுவை விசாரித்த நீதிமன்றம் அவருக்கு ஆதரவாக தீர்பளித்ததுடன் சிகரெட் நிறுவனம் அவருக்கு நஷ்டஈடு செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து சிகரெட் நிறுவனம் மேன்முறையீடு செயதுள்ளது. (ம)

## வாஜ்பாய்க்கு சத்திர சிகிச்சை வெற்றி

புதுடில்லி,ஜுன்9

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்க்கு வலது முழங்காலில் மூட்டு மாற்று சத்திர சிகிச்சை நேறறு மும்பை மருத்துவ மனை ஒன்றில் வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிகிச்சையின் பின்னர் பிரதமர் தற்போது குணமடைந்து வருவதாக அவருக்கு சத்திர சிகிச்சை அளித்த டாக்டர் தெரிவித்தார். (ம)

## ஈரானில் நேற்று வாக்களிப்பு

தெஹ்ரான்,ஜுன்9

ஈரான் அதிபர் தேர்தலின் வாக்களிப்பு நேற்று இடம்பெற்றது.

தற்போதைய அதிபர் கதாமி, கென்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளர்கள் 9 பேர், சுயேட்சை வேட்பாளர் ஒருவரும் இந்தத் தேர்தலில் போட்டியிட்டனர்.

அதிபர் கதாமியே இந்தத் தேர்தலிலும் வெற்றி பெறுவர் என்று வாக்களிப்பின் பின்னான கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்துள்ளன.

ஈரானின் சீர்திருத்தவாதத் தலைவரான கதாமி தான் தேர்தலில் வெற்றி பெற்றால் தொடர்ந்து சீர்திருத்தத்தை முன்னெடுத்துச் செல்லப் போவதாகத் தெரிவித்திருந்தார்.(ம)

## சிம்பாப்பே சுதந்திரப் போராட்ட வீரர் மரணம்

ஹராரே,ஜுன்9

சிமபாப்வேயின் சுதந்திரப் போராட்டக் குழுவின் தலைவரும் முகாபே அரசாங்கத்தின் செல்வாக்கு மிக்க அரசியல்வாதியுமான செஞ்சிராய் ஹுன்ஸ்வி கடந்த திங்கட்கிழமை உயிரிழந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வகை மலேரியா நோயின் தாக்கம் காரணமாக சிறுநீரகங்கள் செயலிழந்தமையினால் இவர் உயிரிழந்ததாக சுகாதார அமைச்சர் திமோதி ஸ்டாமீஸ் தெரிவித்தார்.

உலக அரங்கில்

இறக்கும் போது இவருக்கு வயது 51 முகாபே அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த இவர் முகாபேயின் அரசியற்கட்சியின் 3ஆம் நிலை தலைவருமாவார்.

கடந்த வருடம் வெள்ளையினத்தவரின் பண்ணைகள் சுவீகரிக்கப்பட்டதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# வீரப்பனை உயிருடன் பிடிக்க அதிரடிப் படைக்கு உத்தரவு

## ஜெயலலிதா சொல்கிறார்

சென்னை,ஜுன்9



சந்தன மரக் கடத்தல்காரனான வீரப்பனை உயிரோடு பிடிக்குமாறு விசேட அதிரடிப் படையினருக்கு ஆணையிடப்பட்டுள்ளதாக தமிழக முதலவர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

"வீரப்பனை உயிருடன் பிடிக்குமாறு அல்லது சரணடையச் செய்யுமாறு விசேட அதிரடிப்படையினருக்கு கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

"இந்த நடவடிக்கைக்காக விசேட அதிரடிப் படை நவீன மயப்படுத்தப்படும். மேலதிக நவீன ஆயுதங்களும் வாகனங்களும் வழங்கப்படும்" என்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசுடனும் கர்நாடக அரசுடனும் கலந்தாலோசனை நடத்திய பின்னர் வீரப்பனைப் பிடிப்பதற்கான விசேட அதிரடிப் படையின் நடவடிக்கைகள் முடுக்கி விடப்படும் என்றும் ஜெயலலிதா சொன்னார்.

இதேவேளை -

வரப்பனைப் பிடிப்பதற்கான முக்கிய தகவல்களைத் தருபவர்களுக்கு 20 லட்சம் ரூபா முதல் 25 லட்சம் ரூபா வரை வழங்கப்படும் என்று மாநில அரசு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வீரப்பனின் நெருங்கிய சகாவான சேத்துக்குளி கோவிந்தனைப் பிடிப்பதற்கான தகவல்களைத் தருபவர்களுக்கு 15 லட்சம் ரூபா பரிசளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-10)

# எண் சோதிடம்

மாணவர்கள், அரசு ஊழியர்கள், வியாபாரிகள், வெளிநாட்டுப் பிரயாணிகள், நோயாளர்கள், திருமணமாகாதவர்கள், காதலர்கள், கலைஞர்கள், தொழிலாளர்கள், கஷ்டநிலையில் உள்ளவர்கள் நீங்கள் ஒவ்வொருவரும், உங்கள் பிரச்சினைகளையும் அபிலாசைகளையும் குறிப்பிட்டு எழுதுங்கள். எண் சோதிடக்கலையின் அதிர்ஷ்ட இரகசியங்களைப் பயன்படுத்தி, திட்டமான, அதிர்ஷ்டகரமான நல்வாழ்வுக்கு வழிவகுத்துத் தருவோம். இன்றே ஆங்கில பிறந்த திகதி, பெயர், கையொப்பம் இட்டு சுயவிலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன் விண்ணப்பிக்கவும்.

**சனி, ஞாயிறு மட்டும் நேரில் சந்திக்கலாம்.**
காலை 8 மணிமுதல் 2 மணிவரை.

எண்கலை ஆசான
**சி.சி.கே.ஸ்ரீராஜராஜேஷ்வரன்**
(88786) வித்தனை வீதி, வல்வெட்டித்துறை.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26 - 07 - 1937 | 10 - 05 - 2001 |

## திருமதி கந்தையா இராசமுத்து

அன்பின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
எம்மையெல்லாம்
ஆளாக்கி சீராக்கி ஞானமதில் வாழ வைத்த
அம்மாவே!
ஆறாத்துயரில் எம்மை எல்லாம் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டதேனோ?
ஆரெமக்கு ஆறுதல் ஆண்டவனே அம்மாவே!
உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
காளித்தாயவள் தாள் வேண்டி நிற்கின்றோம்.
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!

இன்று (09-06-2001) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி நிகழ்விலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

அழகியவான் தோட்டம்,
கோப்பாய் தெற்கு.
(88810)

# ட்டாம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01 - 01 - 1954 | 07 - 06 - 1993 |

## திருமதி நகுலராஜா நகுலேஸ்வரி

திதி: 2001-06-09

எமது அன்புக்குரிய தெய்வமே!
வாழ்க்கை எனும் நீண்ட பயணத்தில்
எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு எட்டு ஆனது.
ஆனாலும் உங்களின் நீங்காத நினைவுடன்
நாம் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்கிறோம்
குடும்பத்தின் ஒளியாய் இருந்தீர்களே!
உங்களை நினைக்கையில் கண்கள் ஆறாகின்றது
உங்கள் அரவணைப்பில் வாழ்ந்த நாம்
அநாதைகளாகித் தவிக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

கணவர், பிள்ளைகள்,
தம்பிமார், தங்கைமார்,
மருமக்கள்,
மாமன்மார், மாமிமார்,
மச்சான்மார், மச்சாள்மார்.

தகவல்:
நகுலேஸ்வரி அரைக்கும் ஆலை,
நகுலேஸ்வரி தொலைத் தொடர்பகம்,
070 213002
அம்பன், குடத்தனை. (88791)

## முகாமில் வசிப்போருக்கு பொருள்கள்

தென்மராட்சி,ஜூன்9

பருத்தித்துறை தும்பளை இலட்சுமணன் தோட்ட இடம் பெயர்ந்தோர் முகாமில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் வழங்கினார்.

முகாமில் தங்கியுள்ள மக்களுக்கு விநியோகிப்பதற்காக ஈ.பி.டி.பி. தலைமையகம் அத்தியாவசியப் பொருள்களை வழங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-117)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்9

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் மாதாந்தப் பரீட்சைக்கான பரிசளிப்பும், கணிப்பீட்டறிக்கை வழங்கும் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30மணிக்கு அக்கடமியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சூசைஆனந்தன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-10)

## கல்வி உபகரணங்கள் அன்பளிப்பு

காரைநகர்,ஜூன்9

சிறுவர் உரிமைகள் கண்காணிப்பு குழுவினால் காரைநகரில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை சீருடைகள், கல்வி உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி பொருள்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக் கிழமை பிற்பகல் காரைநகர் கலாநிதி ஆதியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

காரைநகர் பகுதியைச் சேர்ந்த 72 மாணவர்களுக்கு பாடசாலை சீருடைகள், அப்பியாசக் கொப்பிகள், கல்வி உபகரணங்கள், சப்பாத்துக்கள் என்பன வழங்கப்பட்டன. (ம-73)

## விரிவுரைகள் 14ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்9

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் புதிய கல்வியாண்டு ஆசிரிய மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

புதிய கல்வியாண்டுக்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரிய மாணவர்களின் பெயர்ப் பட்டியல் கொழும்பு கல்வி அமைச்சில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளது. உரிய மாணவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் ஏற்கனவே தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

அனுமதிக் கடிதங்கள் கிடைக்கப் பெற்றவர்கள் எதிர்வரும் 14ஆம் திகதி காலை 8.00 மணிக்குத் தமது பதிவுகளை மேற்கொண்டு, அன்றைய தினமே விரிவுரைகளுக்குச் சமுகமளிக்க வேண்டுமென கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் மு.பரஞ்சோதி அறிவித்துள்ளார்.

புதிய கல்வியாண்டில் ஏழு பாட நெறிகளுக்காக 250 ஆசிரிய மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். (ம-73)

கலாபூஷணம், சிற்பச் சக்கரவர்த்தி
**ஆறுமுகம் ஜீவரட்ணம்**
அவர்களுக்கு எமது



# கண்ணீர் அஞ்சலி

சிற்றுளியாலே தெய்வச்
சிலைகளைப் படைத்தோய்
என்றும்
கற்றவர் பலரும் போற்றக்
கவினுறு வாழ்வு வாழ்ந்தாய்
மற்றவர்க் குதவி செய்து
மனநிறை வடைந்த ஜீவ
ரத்தினம் ஐயா! - உங்கள்
மலர்போலி வதனம் - என்றும்
மாறாது
எம் நினைவில்.........

*தலங்காவற் பிள்ளையார்*
*திருநெல்வேலி கிழக்கு.* **இளைஞர்கள்.** (88816)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



| அன்னையின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 12 - 10 - 1969 | 21 - 06 - 2000 |

## அமரர் கந்தசாமி சுரேஸ்குமார்

(கனடா)

அன்பாலும் பண்பாலும் உயர்ந்து நின்றவனே!
புன்சிரிப்பால் எம் உள்ளங்களைக் கவர்ந்தவனே!
அந்தோ நின் பிரிவு எம்மால் ஆற முடியவில்லை ஐயா,
என் செல்வமே! நீ மறைந்து ஓர் ஆண்டு சென்றாலும்
கண்ணுக்குள் உம் உருவம் உயிரோடு வாழுதையா!
ஆறாது விழிகளில் வடிகின்ற
கண்ணீர் வேதனைக்குள் ஒளிச்
சுடராகத் திகழும் எங்கள் செல்வமே!
சோதனைகள் இப்படியுமோ பாவிகளுக்கு
கொடுமைக்கு இப்பலம் பரமன் கொடுப்பதுவோ
பாவிகள் நாம் உன்னைப் பிரிந்து
சித்தம் கலங்கி நிற்கின்றோம்!
வளந்தேடிச் சென்ற இடம் உனக்கு
வஞ்சனை தான் செய்ததோ?
இளம் பயிரே! உன் வாழ்வை
வியந்து அது குடித்ததுவோ?
வரவை எண்ணி நாங்கள் இங்கு
வழி பார்த்து நின்றிட!
காலன் விளையாடிக் காலம் முடித்தாலும்
கண்ணே நீ எங்கள் மனதில் வாழ்வாய்!
முருகப்பெருமான், வீரபத்திரர், பிள்ளையார் பாதமதில்
கண்ணீர் மழை தூவிக் கை கூப்பி
வணங்கி நிற்கின்றோம் உனது ஆத்ம சாந்திக்காக!

*உனது பிரிவால் துயருறும்*
மனைவி, தாய், சிறியதகப்பன், பெரியதாய்,
மாமா, மாமி, சகோதரங்கள்,
உடன் பிறவாச் சகோதரங்கள்.

*15ஆம் கட்டை,*
*உடுப்பிட்டி.*
(88738)

உ
"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம"

# திருமண அழைப்பு

பேரன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விஷு வருடம் வைகாசி மாதம் 28 ஆம் நாள் நாளை மறுதினம் (11.06.2001) திங்கட்கிழமை காலை 11-55 முதல் 1-25 வரையுள்ள இடப லக்கின சுபமுகூர்த்த வேளையில்

| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
|---|---|
| **பிரபாகரன்** | **தங்கமலர்** |
| (கண்ணன்) | (தங்கம்) |

ஆகிய இருவருக்கும் இறைவன் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இருவீட்டார் அழைப்பு)
*(பெண் வீட்டார் தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை)*
நல்வரவை இனிதே விரும்பும்

திருமதி ஆ. தவமணி (தாய்)
திரு. திருமதி க.விஜயகுமார்
செல்வன் ஆ.சுதாகரன் (குட்டி, லண்டன்)
*"சியாமளா இல்லம்"*
*வதிரி வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.*

திருமதி ஆ.மகேஸ்வரியும் பிள்ளைகளும்
நிரந்தர முகவரி :
*இத்தியடி பிள்ளையார் கோயிலடி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி,*
தற்போதைய முகவரி :
*பிளாக் வீதி, சங்கானை.* (88627)

# தமிழை, சைவத்தைப் போற்றி வளர்க்கும் மொறிஷியஸ் நாட்டுத் தமிழ் மக்கள்

**மொறிஷியஸில் ஒரு கலப்பின கலாசாரத்துக்குள் சிக்குண்ட நிலையிலும் அங்குள்ள பெரும்பான்மை இந்துக்கள் தமிழ் கலா சாரத்தையும் இந்துப் பண்பாட்டையும் கட்டிக் காப்பாற்ற எவ்வளவு பிரயாசை கொண்டுள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுகிறது இக்கட்டுரை.**

**மொறிஷியஸ் நாட்டின் மிகப் பெரிய இந்து ஆலயமான சொக்கலிங்கம் மீனாட்சி அம்மன் கோயில் மகாகும்பாபிஷேகம் கடந்த ஜனவரியில் நடைபெற்றது. அந்தவிழாவில் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்று கலந்து கொண்ட யாழ்.மாவட்ட மேலதிகப் பதிவாளரும் சமயப் பிரமுகருமாகிய ந.சதாசிவ ஐயர் அங்கு சைவமும், தமிழும் பேணி வளர்க்கப்படும் முறையை தாம் நேரில் கண்டு, கேட்டு அறிந்து கொண்ட தகவல்கள் மூலம் விளக்குகிறார்.**

மொறிஷியஸ் ஆழ்கடலின் மத்தியில் ஆபிரிக்கக் கண்டத்திற்கு தென்கிழக்கே மடகஸ்காருக்கு 800 கி.மீ தொலைவில் உள்ள மிக அழகான தீவாகும். இதன் பரப்பளவு 1865 ச.கி.மீ உயரமற்ற குன்றுகள் நிறைந்த கண்டியைப் போன்ற சுவாத்தியமுள்ள நாடு. மாரியில் பெருக்கெடுத்தோடும் ஓர் அழகிய ஆறு, ஒரு நீர் வீழ்ச்சி, பெரிய நீர்த் தேக்கங்கள் என்பன நீர்வளத்தைக் கொடுக்கின்றன. எரிமலை ஒன்று இருந்து அணைந்து போன அடையாளங்கள் இன்றும் உள்ளன. சிறப்பான பெருந்தெரு அமைப்புக்கள், திட்டமிட்ட நகர அமைப்பு உண்டு. மிகப்பெரிய அளவில் கரும்பும், சிறிய அளவில் தேயிலை, அன்னாசி உற்பத்தி நடைபெறுகின்றது. மக்கள் தொகை பதினொன்றரை லட்சம். 51 வீதம் இந்துக்கள் ஏனையோர் முஸ்லிம்கள், கிறிஸ்தவர், சீனர்கள். உத்தியோக மொழி ஆங்கிலம். எனினும் பத்திரிகை வானொலி, தொலைக் காட்சி யாவும் பிரெஞ்சு மொழிக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன. பல மொழிகளின் கலப்பால் உருவான கிறியோல் எனும் மொழியை பேசுகிறார்கள்.

இந்துக்களில் பெரும்பாலோர் இந்தி மொழியை பேசுகிறார்கள். ஆனால் தமிழர்கள் தமிழை மறந்து விட்டனர். தம்மைத் தமிழர் என்று சொல்லிக் கொள்பவர்கள் கிறியோல், பிரெஞ்சு ஆகியவற்றையே பேசுகின்றார்கள். அங்கு வாழும் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் தமிழ் பேசுகிறார்கள். நாற்பது வயதுக்கு மேற்பட்டோர் ஓரளவு பேசுகிறார்கள். இளைஞர்கள், குழந்தைகளுக்கு தமிழ் தெரியாது. ஆனாலும் தம்மைத் தமிழர் என இனங்காட்டிக் கொள்வதிலும் தமிழுக்காக குரல் கொடுப்பதிலும் மிக உறுதியாக உள்ளனர். எல்லோரும் தமிழ்ப் பெயர்களையும், இந்துக் கடவுள்களின் பெயர்களையுமே தமது பெயராகக் கொண்டுள்ளனர். சிறு பிள்ளைகளுக்கு கூட சண்முகா, கணபதி, வாசு தேவன், புவனேசுவரி, தெய்வானை, சரஸ்வதி, பாக்கிய லட்சுமி எனப் பெயரிட்டுள்ளனர்.

தமிழ் வாசிக்கத் தெரியாவிட்டாலும் பல இடங்களிலும் முக்கியமாகத் தமிழில் எழுதி வைக்கிறார்கள். தாம் தமிழர் என்பதை பெருமையுடன் சொல்லிக்கொள்கிறார்கள். தமிழ மீது அவர்களுக்குள்ள பற்றுக்கு ஓர் உதாரணத்தை நான் சந்தித்த அந்நாட்டு அமைச்சர் ஒருவர் சொன்னார்.

"மொறிசியஸ் பண நோட்டில் முன்பு முதலில் ஆங்கிலமும் இரண்டாவதாக தமிழும் மூன்றாவதாக இந்தியும் இடம்பெற்றிருந்தன. ஆனால் இடையில் வந்த அரசாங்கமொன்று இந்தியை இரண்டாவதாகவும் தமிழை மூன்றாம் இடத்திலும் மாற்றியமைத்தது. சிறுபான்மையராக இருந்த தமிழர் ஒரே குரலில் எதிர்ப்பைக் காட்டி தமிழை இரண்டாவது இடத்துக்குக் கொண்டுவந்ததுடன் பழைய நோட்டுகளை அரசு மீளப் பெறவும் செய்தார்கள். இன்றும் பண நோட்டில் தமிழ் அழகாக இரண்டாம் இடத்தில் உண்டு. ஆனால் அதனை வாசித்து அறிந்து கொள்ளும் பிள்ளைகள் இல்லை.

கலாசாரம் இந்திய, ஐரோப்பிய, ஆபிரிக்க கலப்பாக இருப்பினும் தமிழ்ப் பெண்கள் ஆலயத்துக்கும், திருமணங்களுக்கும், மங்கள நிகழ்வுகளுக்கும் வரும்போது சேலையணிந்து, நகை, பொட்டு, பூ என்பவற்றுடன் தமிழர்களாகவே காட்சி தருகின்றனர். அதிகமான பெண்கள் மஞ்சள் நூலில் தாலியணிந்திருந்தார்கள். ஆண்கள் நஷனல் வேட்டி அணிகிறார்கள். உருத்திராட்சம் ஓம், வேல் பென்டனுடன் கூடிய பவளம், முத்து, தங்க மாலைகளை அணிகிறார்கள். சைவ உணவில நாட்டமுள்ளவர்களாக உள்ளனர். தமிழ் பக்திப் பாடல்களை விரும்பிக் கேட்கிறார்கள். பாடுகிறார்கள். மாலை நேர, வார இறுதி வகுப்புக்களை நடத்தி பிள்ளைகளுக்கு தமிழ், பண்ணிசை, சங்கீதம், வீணை, மிருதங்கம், நடனம், என்பவற்றை பல தமிழ்ச சங்கங்கள் நடத்தி வருகின்றன.


தங்கள் பிள்ளைகள் தமிழர்களாக தமிழ் கற்க வேண்டும் என்பதில் பெற்றோருக்கு ஆர்வமிருக்கிறது. ஆனால் பிள்ளைகளிடம் அந்த ஆர்வம் குறைவாக இருப்பதுடன் தமிழின் தேவையுள்ள சூழ்நிலையும் இல்லாதிருக்கின்றது.

தமிழ்ப் பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி இல்லை. T.B.C எனும் தமிழ் தொலைக்காட்சி சேவையை செய்மதி ஒளிபரப்பூடாகவும் பார்க்க கூடியதாக உள்ளது. எனினும் தமிழ் கற்ற பெரியோர்கள் உள்ளனர். தமிழை வளர்க்கவும் கற்பிக்கவும், தமிழ்க் கலாசாரம் பேணவும், தமிழ் விழாக்கள் எடுக்கவும், மாநாடுகள் நடத்தவும் முன்னின்று உழைப்பதுடன் தென் இந்தியாவுடன் கலாசார தொடர்புகளை ஏற்படுத்தி மொறிஷியசில் தமிழ் கலாசாரம் வளர மிகவும் பாடுபடுகின்றார்கள் என்பதை காணக்கூடியதாக இருந்தது. எனினும் தமிழர் பண்பாடு அங்கே மாறிவருவது தவிர்க்க முடியாதுள்ளது. அங்கு ஏற்பட்டுள்ள கலப்புக் கலாசாரத்தினூடாக தமிழர் விழாவான தைபபொங்கல் போகி பண்டிகையாக மாறியுள்ளது. இதற்குக் காரணம் இந்திக்காரர்களின் பெரும்பான்மையாகும்.

இதே போன்று இந்திக்காரர்களானாலும். தமிழரானாலும் பொதுவாக கொண்டாடும் சமய விழாவான சிவராத்திரி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஆவணிச் சதுர்த்தி, தீபாவளி என்பனவும் கொண்டாடப்படுகின்றன. தைப்பூசம் காவடித்திரு விழாவும் நாடெங்கும் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுவதாகக் குறிப்பிட்டார்கள். தைபூசத்தன்று முருகன் ஆலயங்களில் எல்லாம் காவடி எடுத்து ஊர்வலங்கள், வழிபாடுகள் சிறப்பாக நடைபெறுகின்றன. தைப்பூசம் அந்நாட்டில் பொது விடுமுறை தினமாகும்.

### ஆலயங்கள்

சைவ ஆலயங்களும் இந்திக்காரர்களின் மந்திர்களும் நிறைந்து காணப்படுகின்றன. சைவ ஆலயங்கள் மடாலயங்களாகவே பல இருக்கின்றன. எனினும் இப்போது பல ஆலயங்களை முறைப்படி கட்டிவருகிறார்கள். இவற்றுள் தலையாயதும் பெரியதுமாய உள்ளது அந்நாட்டவர்களால் கைலாயம் என அழைக்கப்படும் சொக்கலிங்கம் மீனாட்சி அம்மன் கோயிலாகும். பெரியதோர் நிலப் பரபபில் 71 அடி இராஜ கோபுரத்துடன் காட்சி தரும் பழம் பெருமை மிக்க கோயிலாகும். திருமண மண்டபம், முதியோர் இல்லம், கல்விச்சாலை, அன்னதான மண்டபம் என சகல



**மொறிஷியஸ் நாட்டின் மிகப் பெரியதும், பிரபலமானதுமான 'கைலாயம்' என அழைக்கப்படும் சொக்கலிங்கம் மீனாட்சி அம்மன் கோயிலின் அழகிய முகப்புத்தோற்றம்.**

வசதிகளுடனும் பெரு நந்தவனத்தின் மத்தியில் இக் கோயில் உள்ளது. ஆலயத்தைச் சுற்றி புனித மரங்கள் மலர்ச் செடிகள் யாவும் நாட்டப் பெற்றுள்ளன. இலங்கையில் தலதா மாளிகைக்கு அரசு கொடுக்கும் கௌரவம் போல் இவ்வாலயத்துக்கும் சகல முதன்மைகளும் கிடைக்கின்றன. ஏனைய ஆலயங்களையும் அவ்வப் பகுதி உள்ளூராட்சிகள் மதிப்புடன் கவனிபபதாக குறிப்பிட்டார்கள். இந்திக்காரர்களுடைய மந்திர்களும் அதிகமாக உள்ளன. மூன்று மலைகளும் அவற்றுக்கு இடையே சிறிய நீர்த்தேக்கமும் கொண்ட பிரதேசத்தைப் புனிதப்படுத்தி கங்கைக் கரை போன்ற அமைப்பையும் குன்றுகளில் வட நாட்டுப் பாணியிலான சிவலிங்க அமைப்புக்களும், ஆலயங்களும் அமைத்து வழிபடுகிறார்கள். அங்கு மொரிஸ்நாத் எனும் ஜோதிர்லிங்கம் ஒன்றை அமைத்து இந்தியாவில் இருக்கும் 12 ஜோதிர்லிங்கங்களுக்கு அடுத்ததாக இது 13வது ஜோதிர் லிங்கம் என்று குறிப்பிடுகிறார்கள்.

### இந்துக்கோயில் குருமார்கள்

இலங்கையில் இருந்து சென்ற பிரம்மஸ்ரீ ந.பாலசுப்பிரமணியசர்மா கைலாசம்கோயிலின் பிரதம குருவாகவும் அந்நாட்டின் அரச அங்கீகாரம் பெற்ற குருவாகவும் இருந்து கடமை புரிகிறார். இலங்கைக் குருமார் மூவர் அங்கு உள்ளனர். இந்தியக் குருமார் சிலரும் கடமையாற்றுகின்றனர். பல மொரிஷியஸ் நாட்டு குருமாரும் கடமையாற்றுகின்றனர். அவர்கள் பரம்பரையன்றி சைவர்களாக இருந்து பூசை முறைகளைக் கற்று, மந்திரம் பயின்று பூசை செய்யும் குருமார்களாக கடமைகளைச் செய்கின்றனர். இலங்கை ஆலயங்களில் போன்று வேலைப் பழுக்கள்யாவும் அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கவில்லை. நிவேதனம் முதல், பூசைக்குரிய அபிடேகத்துக்குரிய ஆயத்தங்களை மக்கள் தொண்டர்களே தாமாக முன்வந்து புனிதமாகச் செய்கின்றனர். மிகப் பெரிய கும்பாபிஷேகம் நிகழ்ந்து, மிகப் பெரிய ஆலயமான கைலாசம் ஆலயத்தில் கும்பாபிஷேக நிகழ்வின்போது எடுபிடிவேலைக்கோ, மெய்க்காவல் வேலைக்கோ யாரும் நியமிக்கப்படவில்லை. எல்லா வேலைகளையும் தொண்டர்களே செய்தனா. தொண்டு மனப்பான்மை ஆலயத்தில் கூட்டித் துடைத்து சேவை செய்வது புண்ணியம் எனவும் நினைக்கிறார்கள். மொறிஷியஸில் உள்ள ஏனைய ஆலயங்களிலும் இவ்வாறே நடப்பதாக அங்கு வந்த ஏனைய குருமார்கள் சொன்னார்கள்.

### திருமுறை ஓதுதல்

ஆலயத்தில் தேவாரம் படிப்பதில் பல புதிய முறைகளை கையாள்கிறார்கள். சங்கற்பத்தை குருக்கள் தமிழில் சொல்லிக் கொடுக்க எல்லோரும் சேர்ந்து சொல் கிறார்கள். குருக்கள் பிள்ளையாரின் பூசையை முடித்தவுடன் ஐந்துகரத்தனை, பிடியதனுருகுமை பாடுகிறார்கள். சிவனுக்கு பூசை செய்யும் போது லிங்காஸ்டகம் படிக்கிறார்கள். புஸ்பாஞ்சலியின் போதும் ஜோவாம் புஸ்பம் செய்கிறார்கள். முருகன் பூசையின் போது திருப்புகழ் படிக்கிறார்கள். அபிடேகம் நடக்கும் போது பஜனை செய்கிறார்கள். பக்திப் பாடல்களைப் பாடுகிறார்கள். அக்னிகாரியம் செய்யும் போது சுவாகா சொல்கிறார்கள். தமிழ் பக்திப்பாடல்களை ஆர்வமுடன் கேட்கிறார்கள். பாடுகிறார்கள். வாசிக்கத் தெரியாவிட்டாலும் கேள்வி ஞான மூலம் பாடமாக்கி பாடுகிறார்கள். எந்த வாகனத்தில் சென்றாலும் பக்திப்பாடல் ஒலி நாடா வைத்திருக்கிறார்கள். சுருக்கமாகச் சொல்வதானால் தமிழ் பேசாவிட்டாலும் தமிழர் எனச் சொல்லிக்கொண்டு



**மொறிஷியஸ் நாட்டு பிரதிப் பிரதமர் மற்றும் சொக்கலிங்கம் மீனாட்சியம்பாள் ஆலயக் குருக்கள் ந.பால்சுப்பிரமணியசர்மா, சுவாமி வேங்கடேஸ்வரானந்தா மற்றும் ஆலயச் செயலாளர் ஆகியோருடன் கட்டுரையாளர் சதாசிவ ஐயர்.**

தமிழை நேசிக்கிறார்கள். இந்துக்கள் எனச் சொல்வதில் பெருமையுடன் சைவ அநுட்டானங்களை முறைப்படி இல்லாவிட்டாலும் மிக ஆர்வமுடன் பேணுகிறார்கள்.

### கும்பாபிஷேகம்

நான் பங்குபற்றிய சொக்கலிங்கம் மீனாட்சி அம்மன் கோயில் கும்பாபிஷேகம் இலங்கை, இந்திய, மொறிஷியஸ் குருமாரால் இந்திய பாலக்காடு ஸ்ரீ வெங்கடேஸ்வரானந்தா அவர்கள் நேரில் வந்து ஆசி வழங்க மிகச் சிறப்பாக செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்தின் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஓர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் போல் கிரியை மக்கள் ஆர்வம், சனக் கூட்டம், அன்னதானம் யாவும் சிறப்புற அமைந்தன. இலங்கையில் இல் லாத மேலதிக சிறப்பு ஒன்று அந்நாட்டின் அரசும், அமைச்சர்களும், திணைக்களங்களும் கும்பாபிஷேகத்துக்கான சகல ஒத்துழைப்புக்களும் வழங்கின. அரசு குறுகிய கால விடுமுறை அறிவித்தது. உதாரணத்துக்கு ஒன்று சொல்வதானால் கும்பாபிஷேக நிகழ்வுகளின் போது தினமும் கோயிலையும், வீதியையும் கழுவும் பணியை தீயணைப்புப் படையினரே செய்தனர். கும்பாபிஷேகத்துக்கு வந்த தக அமைப்புக்கள், பெரியோர்கள், தூதுவர்கள் யாவரும் மக்களோடு மக்களாக வந்து வழிபட்டுச் சென்றனர். கும்பாபிஷேகத்தின் போது கோயிலைச் சுற்றி போடப்பட்டிருந்த கடைகளில் தெய்வப் படங்கள், பக்திப் பாடல் கசட்டுகள், இந்துப் பெண்களுககுரிய மங்கல அணிகள் மஞ்சள் குங்குமம், காப்பு ஏனைய பொருள்கள் தெய்வப் பொம்மைகள், திறப்புக் கோர்வைகள், உருத்திராட்ச பவள, சந்தன, துளசிமாலைகள் போன்ற சமயத் தொடர்புடைய பொருள் களே. வேறு தின்பண்டப் பொருள்களோ, வேடிக்கைப் பொருள்களோ இருக்க வில்லை. கும்பாபிஷேக நினைவாக கும்பாபிஷேக மலருடன் கும்பாபிஷேக நினைவு பொறிக்கப்பட்ட பாடசாலை உபகரணங்கள், முதல நாள் உறை, மஞ்சள் சால்வை போன்றவற்றை மக்களுக்கு வழங்கினார்கள். இக்கோயிலின் இராஜ கோபுரத்தை அமைத்தவா அராலியூர் ஸ்தபதி கோபாலசிங்கம் அவர்களும் அவர் குழுவினரும் என்பது குறிப்பிடத்தக்கது.

### எனது குறிப்புக்கள்

சொக்கலிங்கம் மீனாட்சி அம்மன் கோயில் பிரதம குருக்களும் எனது சகோதரருமான ந.பாலசுப்பிரமணிய சர்மா அவர்களின் விருப்பின் பேரில் இலங்கைக் குருக்கள் ஐவருடன் இந்தியா சென்று சுவாமி வெங்கடேஸ்வரானந்தா அவர்களையும் அழைத்துக் கொண்டு மொரிஷியஸ் சென்றேன். எமக்கு வி.ஐ.பி. மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்நாட்டின் ஜனாதிபதி, உப ஜனாதிபதி, பிரதமர், உதவி பிரதமர் மற்றும் பல அமைச்சர்கள், மொரிசியஸ் தலைநகரமான போட்லுயிஸ் மேயர், பேராசிரியர் புஸ்பரதம், விரிவுரையாளர் நாதன், அருணாசலம் மற்றும் பலரை சந்திக்கும் வாய்ப்பும், அரும் பொருள் காட்சியகம், சில அரச திணைக்களங்கள், உயிரியல் பூங்கா, அழகான கடற்கரைகளைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. பலரை சந்தித்து உரையாடி சிந்தனைகளைப் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது. மிகக் குறுகிய காலமான இருவாரமே தங்கினாலும் அந்நாட்டில் செல்வாக்குடன் வாழும் எனது சகோதரரின் உதவியால் இவற்றை சாதிக்கக் கூடியதாக இருந்தது என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ளத்தான் வேண்டும். ✪

### அங்கு திருமணம்

**மொறிஷியஸில் இரு திருமணங்களில் பங்குபற்றினேன். ஆலய மண்டபத்தில் நடைபெற்றன. சில மாற்றங்கள் இருந்தாலும் கூறை கொடுத்தல், தாலி கட்டுதல் என்பன பின்பற்றப்படுகின்றன. தாய்மாமனுக்கே முதலிடம் கொடுக்கப்படுகிறது. திருமண நிகழ்வு சுருக்கமானதாகவும், அரை மணி நேரத்தில் நிறைவேறுவதாகவும் உள்ளதைக் கண்டேன்....**

# அன்று மதுரையை எரித்தாள் கண்ணகி! இன்று செய்வதறியாது தவிக்கிறாள் பொன்மணி!

சங்க காலத்தில் ஒருமுறை மட்டுமே தவறாக வழங்கபட்ட நீதியினால் மதுரை நகரே எரிந்தது.

நிகழ்காலத்தில் அநீதியே உருவான நிலையில் எம் வாழ்க்கை புகைந்து கொண்டிருக்கிறது. அவற்றில் இங்கே ஒரு பகுதி மட்டும் காட்சியாகிறது.

கோவலன் தலை கொய்து அநீதி இழைத்தது சங்ககாலம்!

மாதவன் உடல் புதைத்து மண்டையோடு மிஞ்சுவது நிகழ்காலம்!

சங்ககால நீதி தவறிய நிகழ்வையும் நிகழ்கால நீதி கிடைக்கா எம் வாழ்வையும் புதிய கண்ணோட்டத்தில் ஒருங்கிணைத்தது 'நீதியின் இருக்கைகள்' கவிதை நாடகம்.

மே 13ஆம் திகதி கைலாசபதி கலையரங்கில் சாம் பிரதீபனின் 'நீதியின் இருக்கைகள்' மேடையேறியது. யாழ்ப்பாணம் திருமறைக்கலாமன்றத்தினர் வழங்கிய இந்த ஆற்றுகை யாழ்ப்பாண நாடக உலகில் புதிய பரிமாணத்தை சுவைஞர்களிற்கு ஏற்படுத்தியது. தனியே கவிதை நாடகம் என்ற நிலை கடந்து பரதக் கலையும் இணைந்து பார்த்தவர்கள் மனதில் மகிழ்வினை உண்டாக்கியது என்பதில் ஐயமில்லை.

இந்த நாடகத்தின் சிறப்பம்சமே நிகழ்கால வாழ்வுடன் சங்க காலத்தை இணைத்து ஒரே நேரத்தில் ஒப்பிட்டு காட்டியதுதான்.

செங்கோல் ஏந்தி ஆண்ட பாண்டிய மன்னனாகிய நெடுஞ்செழியனும், நீதி விலகிய நம் நாடு தன்னில் கொடுங்கோல் ஏந்தி ஆண்டு வரும் இளஞ்செழியனும் மேடையில் தோன்றி தங்கள் கொடிகளை ஏற்றுவதுடன் ஆற்றுகை ஆரம்பமானது. பரஸ்பரம் இருவரும் கைகுலுக்கித் தங்களை அறிமுகம் செய்துகொள்கையில், நெடுஞ்செழியன் -

*"கோவலன் என்றொரு*
*வணிகனின் தலையது*
*கோரமாய் உருண்டதோர்*
*அநீதி செய்த பின்*
*குத்துண்ட நெஞ்சினனாய்*
*குவலயம் தன்னிலே*
*என் ஆவி துறந்திட்ட*
*பாண்டிய வேந்தன் நான்"* -

என்றும் -




*"சமகாலம் அந்தோ*
*ஓர் எமகாலம்*
*எனும் பெயர்*
*பெற்றிட அயராது*
*உழைத்து நான்*
*வாழ்ந்தவன்*
*எத்தனை எத்தனை*
*நவீன கோவலன்*
*தலைகளைக் கொய்தும்*
*மண்ணுள் புதைத்தும்*
*சளையாது ஆளும்*
*நவீன பாண்டியன்*
*நானே தான்"* - என்று மார்தட்டிய இளஞ்செழியனும் சொல்ல நாடகம் சங்ககாலம் நோக்கி நகர்கிறது.

நாடக ரசிகர்களை அழகியல் உணர்வுடன் கவரும் நோக்கோடு மாதவி நடனமாட வரும் காட்சியும், அவளது அபிநயமும் நிகழ்த்தப்பட்டது. கோவலனும் மாதவியும் கூடல் கொண்ட நேரம் ஊழ்வினைப் பயனினால் இருவரும் பிரிக்கப்படுகின்றனர். இது குறியீட்டு பாத்திரங்கள் மூலம் வெளிக்கொணரப்பட்டது.

மீண்டும் மேடையில் நெடுஞ்செழியனும் இளஞ்செழியனும் தோன்றி, கணவனைக் காணாது தேடும் கண்ணகி பற்றியும், 'ஓமந்தை எல்லையில் எரிபொருள் வியாபாரம் செய்திடப் போனவன் திரும்பிடத் தாமதம்' என அவனைத் தேடும் பொன்மணி பற்றியும் அறிமுக உரை கொடுத்தவுடன் கண்ணகியும் பொன்மணியும் கணவர்களைத் தேடியபடியே மேடையேறினர்.

மாதவியிடம் பொருளிழந்த கோவலனும், வியாபாரத்தில் நஷ்டமடைந்த இரு பிள்ளைகளின் தந்தையான மாதவனும் ஒரே நேரத்தில் வர, கணவன்மாருக்கு ஆறுதல் கூறி, தன் ஒற்றைக் கால் மாணிக்க சிலம்பினை கண்ணகியும், தன் வளையல் உட்பட அணிந்திருந்த அத்தனை நகைகளை பொன்மணியும் கொடுத்து இவற்றை விற்று மீண்டும் வியாபாரம் தொடங் கும்படி அனுப்பி வைக்கின்றனர்.

விற்க வந்த இடத்தில் மகாராணியின் சிலம்பு திருடியதாக கோவலன் காவலனாலும், "இத்தனை நகையும் உன்னிடம் எப்படி வந்தது" என்று சந்தேகத்தினால் மாதவன் ஏவலனாலும் கைது செய்யப்படுகின்றனர். விளக்கி கூறியும் இருவரும் ஆட்சியாளர் முன் கொண்டுவரப்பட -

☆ நெடுஞ்செழியன்:- *முடியட்டும் அவனது கதை*
*வேகட்டும் அவனது சிதை.*

☆ இளஞ்செழியன்:- *புதையட்டும் அவனது உடல்*
*கருகட்டும் அவனது குரல்* -

எனத் தீர்ப்பினை வழங்குகையில் பின்னணியில் "நீதியின் இருக்கையில் நரபலி வாடைகள்" என்ற குரலுடன் கோவலன், மாதவன் இருவரினதும் வாழ்வு முடிகிறது.

அநீதி கண்டு கோபாவேசத்துடன் கண்ணகியும் பொன்மணியும் ஆட்சியாளர்களிடம் நீதி கேட்கும் வேளையில் -

பொன்மணி:- *நகை நட்டு வைத்திருப்பவர் எல்லாம் குற்றவாளியா?*

இளஞ்செழியன்:- *ஏது அத்தனை நகை எப்படி வந்தது? இது என கேள்வி. நான் சொல்கிறேன் இம்மாநகர் தன்னை குண்டு வைத்தழிப்பது மாதவன் எண்ணம் ஏற்பாடும் அதுவே!* - என காரணம் கூற முற்பட, கண்ணகி தன் சிலம்புதான் என மற்ற கால் சிலம்பை எறிந்து உடைக்கிறாள். நீதி தவறிய மன்னனிடம் கணவனின் உயிரைத் திருப்பி தரகேட்கிறாள். ஆனால் பொன்மணியோ -

*"ஐயகோ*
*எனக்கு நீதி இல்லையா*
*என்னால்*
*நிரூபிக்க முடியவில்லையே!*
*பேச முடியவில்லையே!*
*வாதாட முடியவில்லையே!*
*இங்கு அநீதியின் மேல்*
*கூடுகட்டப்பட்டு*
*முட்டையிடப்படுகிறதே!*
*எங்கள் நீதிகளை*
*மீட்டுத் தருவார் யார்?*
*இங்கே -*
*விசாரணையின்றி வேகும்*
*கோவலன்கள் எத்தனை?*
*அத்தனை பேருக்கும் - ஒரு*
*கண்ணகி இல்லையே - இங்கு*
*கண்ணகி இல்லையே!"* - என இயலாமையின் வெளிப்பாடாய் கதறுகிறாள்.

கோபங் கொண்ட கண்ணகி மதுரையை எரிக்க நெடுஞ்செழியன் உயிர் துறக்கிறான். ஆனால் இளஞ்செழியன் பொன்மணியை வருத்தி பூட்ஸ் காலால் ஏறி மிதிக்கிறான்.

ரசிகர்கள் அனைவரின் இதயத்தையும் இறுதிக் காட்சி உலுப்பிட வைதது உணர்ச்சிகளின் இயலாமையை உலகிற்குக் காட்டியது. நெஞ்சைத் தொட்டது.

**தயா லோகதாசன்**

நாடகத்தின் கலைஞர்கள் அனைவரும் பாத்திரங்கள் உணர்ந்து திறம்பட நடித்திருந்தனர். இசையில் இன்னும் கூடுதல் கவனம் இருந்திருக்கலாம். காட்சியமைப்புகள், ஒலி, ஒளி நன்று.

மொத்தத்தில் ஒரு புதிய பரிமாணத்தில் தமிழரின் பிரச்சினைகளை நெறியாளர் சாம் பிரதீபன் கையாண்ட விதம் அனைவராலும் பாராட்டத்தக்கது.

மீண்டும் பலப்பல மேடையேறி 'நீதியின் இருக்கைகளில்' எமது நிலை உணரப்பட வேண்டும் என்பது அவா. ✪

# தமிழர் கலை, நாடக மரபுகளை ஒன்றுசேர வெளிப்படுத்திய விழா

## கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சிறப்புற நடைபெற்ற உலக நாடகதின நிகழ்ச்சி

கடந்த சில ஆண்டுகளாக கிழக்குப் பல்கலைக்கழகம் உலக நாடக தின விழாவை ஒரு வாரத்திற்கு தொடர்ந்து நடத்தி வருகின்றது. இந்த வருடமும் மார்ச் மாதம் 26 முதல் 30 வரை பல்கலைக்கழக மண்டபத்திலும், வெளியில் அமைக்கப்பட்ட வட்டக்களரி அரங்கிலும் நிகழ்வுகள் அரங்கேறின. நுண்கலைத் துறையின் ஒழுங்கமைப்பில் நாடக ஆற்றுகைகள், 'கிழக்கு இசை' அரங்கேற்றம், அலைக்காற்றுக் கலைகள் பற்றிய விவரணத் திரைப்படக் காட்சிகள், மலையக பண்பாட்டுக் குழுவினரின் பாரம்பரிய நாடக மேடையேற்றங்கள் மற்றும் 'இராவணேசன்' வடமோடி நாட்டுக் கூத்தின் நவீனமயப்பட்ட ஆற்றுகை என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக நடைபெற்றன.

முதல் நாள் பறை மேளக் கூத்தும், கழிகம்பும், வீரி நாடகமும் நிகழ்த்தப்பட்டன. இரண்டாம் நாள் மலையக புதிய பண்பாட்டுக் குழுவினரின் 'காமன் கூத்து', 'அருச்சுனன் தபசு', 'பொன்னர் சங்கர்', ஆகிய பாரம்பரிய நாடகங்களும், நாட்டார் இசையும், நவீன நாடகமும் மேடையேறின. மூன்றாம் நாள் மட்டக்களப்பு பாரம்பரியக் கலைகளான 'தாடகை வதம்' நாடகமும், பாரமுறி விளையாட்டும், நுண்கலைத்துறையினரின் 'கிழக்கு இசை'யும் இடம் பெற்றன.

கிழக்கு இசையில் உருவேற்றம், மாரியம்மன் நடை, மாரியம்மன் வீதியுலா, காவடிப்பாடல், கொம்பு விளையாட்டுப் பாடல், கவி, வடமோடிக் கூத்துப் பாடல்கள், தென்மோடிக் கூத்துப் பாடல்கள், வசந்தன் பாடல், காத்தவராயன் கும்மி, மாரியம்மன் சிந்து, காவிளம் ஏர்ப் பாடல், வேடிக்கைப் பாடல், வாழி பாடல், என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன. ஈழத்து தேசிய இசை வடிவத்துக்கேற்ற மூலங்கள் இங்கு கிடைக்கின்றன. இத்தோடு வடக்கு இசைக்கோர்வை களையும் (வன்னி உட்பட) இணைத்துக் கொண்டால் ஈழத்து இசை வடிவம் முழுமை பெறும் என்பது திண்ணம்.

உலக நாடக விழாவின் நான்காம் நாள் 3 ஆங்கில நாடகங்கள் மேடையேறின. இரு பாடசாலை நாடகங்களும், பல்கலைக்கழக ஆங்கில போதனைப் பிரிவுத் தயாரிப்பான 'Flightless ButterFlies' (பறப்பற்ற வண்ணத்துப் பூச்சிகள்) எனும நாடகமும் நிகழ்த்தப்பட்டன. இப் பல்கலைக்கழக நாடகம் சமகால தமிழர் வாழ்வின் ஒரு குறுக்குவெட்டை 'அம்பி' எனும் பாத்திரம் மூலம் சித்திரித்தது.

இறுதிநாள் நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக இரு கலைஞர்கள், நாடகக் கலைஞர் கே.ஏ.ஜவாகர் மற்றும் கூத்துக்கலைஞர் மு.கணபதிப்பிள்ளை ஆகியோர் 'தலைக்கோன்' விருது வளங்கிக் கௌரவிக்கப்பட்டனர். ஈற்றில் அரங்கேறிய 'இராவணே'சன் வடமோடி கூத்து பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களால் எழுதப்பெற்று (பேராசிரியர் சு.வித்தியானந்தனால் 1960 களில் மேடையேற்றப்பட்ட) நவீன முறையில் ஒப்பனை, காட்சித் தட்டிகள் இசையமைப்பும் செய்யப்பட்டு மேடையேற்றப்பட்டது. ஈழத்தவர்களின் நாடகம் என்று சொல்லும்படியாக கலைத்துவச் சிறப்புடனும் தமிழ் நாட்டுக் கூத்துகளில் வேறுபட்டதாகவும், பரதர் கலைக்கும் இணையாகவும் சிறப்பான ஒரு தமிழ் நாடகமாக மிளிர்ந்தது. ஆட்டங்களும், பாடல்களும் தமிழுக்கேயுரிய சிறப்பு நாடக வெளிப்பாட்டு உத்திகளாகும்.

**கந்தையா ஸ்ரீகணேசன்**

அத்தோடு மேற்கு நாட்டு இலக்கிய உத்திக்கு ஏற்ப ஒரு 'Tragic Hero' (அவலச் சுவை நாயகன்) ஆக இராவணேசன் பாத்திரம் சித்திரிக்கப்பட்டிருந்தது. சிறப்பு மிக்க வீரன் சிறு குறைபாட்டினால் தன்னிலை அழிந்து அவல நாயகன் ஆகுதல் அவலச் சுவையின் சிறப்பு அம்சம். ஒப்பனை, ஆடை அணிகலன், என்பன மிகவும் கலைத்துவம் மிக்கதாகவும், சிந்தனைக்கு விருந்தாகவும் அமைந்தது குறிப்பிடத்தக்கது. மொத்தத்தில் உலக நாடக தினவிழா தமிழர் கலை, நாடக மரபுகளை தோண்டி எடுக்கும் விழாவாக அமைந்தது. அதற்கு கட்டியம் கூறுமாப் போல் அமைந்தது பல்கலைக்கழக இன்னியம். இது மட்டக்களப்பு பாரம்பரிய இசைக்கருவிகள், ஒப்பனைகளுடன் திட்டமிட்டு அமைக்கப்பட்டமை எம் தனித்துவத்தை நிலைநாட்ட உதவியது என்லாம். ★



காணாமற்போனோர் குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கு நிதி சேகரிக்கும் வகையில் அண்மையில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட 'உயிர்விசை' நாடகத்தில் ஒரு காட்சி.

# கலையை நாடும் உள்ளம் இறைவன் வாழும் இல்லம்

தமிழர் தம் பண்பாடு, கலாசாரத்துடன் பின்னிப்பிணைந்தவை இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ்கள்.

முன்னர் குடாநாட்டில் பொங்கிப் பிரவகித்த கலை ஆர்வம் தற்போது வெறும் சிற்றோடையாக தளர் நடை போடுவது கண்கூடு. இதற்கு யுத்தச் சூழல் ஒரு காரணம் என்றாலும் கூட, பொருளாதார மயமாகிவிட்ட வாழ்க்கை முறை மிக முக்கிய காரணம் என்பது மறுக்கமுடியாத விடயம்.

சோகத்தையும் சுகமாக்கும் சகதி படைத்தவை கலைகள். அப்படி இருக்கும் போது, எண்ணற்ற துன்பங்களைத் தொடர்ந்து அனுபவித்து வரும் நமக்கு, கலைகள் தரும் ஆறுதல் - தற்காலிகமானதனாலும் - அவசியமானதே.

பொருளாதாரமயமாகிவிட்ட வாழ்க்கையில், பெற்றோர்கள் தமது பிள்ளைகள் கலைகளில் தேர்ச்சி பெறுவதை விட, நாலு காசு பார்க்கும் கல்வியில் நாட்டம் கொள்வதை அதிகம் விரும்புவது நியாயமானதே.

ஆனால், பணம் மட்டும் வாழ்க்கையில்லையே. அதையும் தாண்டி, மன நிம்மதி என்று ஒன்று உண்டல்லவா? அதனைத் தமது குழந்தைகள அடையும் இலகு வழியாக உள்ள கலைகளை பெற்றோர் புறந்தள்ளுவது கண்களை விற்றுச் சித்திரம் வாங்குவது போன்றதே. இன்று நமது சமூகத்தில் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு நடைப் பிணங்களாக மாறிவிட்ட வர்களின் எண்ணிக்கை கணிசமாக உள்ளது. இதைவிட விவாகரத்துகளும், தற்கொலைகளும், மனநோய்ப் பாதிப்புகளும் குடாநாட்டு மக்களை சத்தமின்றி சீரழித்து வருகின்றன.

மனநல மருத்துவத்தால் மனநோயைக் குணப்படுத்த முடிந்தாலும், மனநோய்க்கு காரணமான மனஅழுத்தங்களை மாற்றிடும் சக்தி கலைகளுக்கே உள்ளது.

**மதுமிதா**

குடாநாட்டில் போர் ஒருபுறமிருக்க, உள்ளூர் இளைஞர்கள் - ஏன் சிறுவர்களும்கூட வழிதவறிச்செய்யும் அடாவடி அட்டகாசங்கள் அதிகரித்து வருவது, சமுதாய நலனில் அக்கறையுள்ள அனைவரையும் கவலை கொள்ளச்செய்யும் விடயமாகும்.

இளைய தலைமுறையின் சிந்தனைகள் வழிதவறிச் செல்ல, அவர்களது மனங்களை அமைதிப்படுத்தும் விடயங்களின்பால் செலுத்தாததே காரணம் என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

பெற்றோர்கள் தமது விருப்பங்களைத் தமது பிள்ளைகள் மீது திணிக்கும் ஒரு காலசாரம் எப்படியோ நமது சமுதாயத்துக்குள் பரவிவிட்டது. துரதிர்ஷ்டவசமாக பெற்றோரில் பெரும்பாலானோருக்கு கலைகளில் நாட்டமற்றுப்போய்விட்டது.

இந்த நிலையில், உணவு, துயில் மறந்து ஓடி, ஓடிப் படித்து ஏதாவது ஒரு வேலையில் - தனக்குப் பிடிக்கிறதோ இல்லையோ - தன்னைப் 'பொருத்திக்கொண்டு' உப்புச்சப்பற்ற வாழ்க்கையைத் தள்ளும் கட்டாயத்தில் வாழ்பவர்களே நம்மில் அநேகர்.

பிடிக்காத வாழ்க்கையில் ஓய்வு நேரங்கள் கிடைப்பது மிக அரிதானது. அதையும் மீறி, அபூர்வமாகக் கிடைக்கும் ஓய்வு நேரங்களை, காதைப் பிளக்கும் இரைச்சல் இசையும், வன்முறைகளும், ஆபாசங்களும் மலிந்த திரைப்படங்கள் அடைத்துக்கொள்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட இளைய தலைமுறையினரின் மனங்கள் அன்பும், பண்பும் பூத்துக்கனியும் சோலைகளாக இருக்கும் என்று நாம் எதிர்பார்ப்பது எப்படி நியாயமாகும். ★

# சமாதானப் பேச்சுத் தொடர்பாக அரசுக்குள் இருவேறு நிலைப்பாடு

***இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண முடியும், காணப்பட வேண்டும் என ஜனாதிபதி கூறுகிறார். ஆனால் புலிகளை அழித்து யுத்தத்தின் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்கிறார் பிரதமர். தீர்வு தொடர்பாக அரசுக்குள் ஒத்த கருத்து நிலவவில்லை. இது தொடர்பாக 'ஞாயிறு லங்காதீப' பத்திரிகையில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.***

அரசுக்கும் விடுதலைப் புலிகளுககும் இடையில் மேற்கொள்ளப் படவுள்ள சமாதானப் பேச்சுக்களின் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பதில் தற்போது இந்நாட்டில் உள்ள அதிகமான மக்களிடையே உருவாகியுள்ள வினாவாகும். இந்த இரு தரப்பாருக்கும் இடையே நிச்சயமாக சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறுமா? அவவாறு நடைபெறாவிடின் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாமலேயே சமாதான முயற்சிகள் சிதைவுறுமா? இல்லையேல் விடுதலைப் புலிகளின் முன்நிபந்தனையான தடை நீக்கத்தை அரசு மேற்கொள்ளுமா?

நோர்வே சமாதானத் தூதுவரின் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன? ஆகிய கிளைக் கேள்விகள் ஆரம்ப வினாவுடன் இணைகின்றன. அதிகமான மக்கள் இக் கேள்விகளுக்கான விடைகளை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். இருப்பினும் அவற்றுக்கான திடமான பதிலை எவராலும் அளிக்க முடியாதுள்ளது. தேசிய தொலைக் காட்சிச் சேவையில் அண்மையில் உரையாற்றிய ஜனாதிபதி, யுத்

## முதலில் அதற்கு முடிவுகாண வேண்டும் என்கிறது 'லங்காதீப'

தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானத்தை உருவாக்கும் முயற்சியில் எதுவித பின்னடைவும் இல்லை எனத் தெரிவித்தார். யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வு காண்பதற்காக பேச்சுவார்த்தைக்கு வருமாறு தான் விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுப்பதாகவும் ஜனாதிபதி அந்த உரையில் மேலும் தெரிவித்தார்.

சமாதானம் தொடர்பாக ஜனாதிபதியினதும் அரசினதும் நிலைப்பாடு என்ன என்பது அந்த உரையிலிருந்து தெளிவாகின்றது. சுருங்கக் கூறின் ஜனாதிபதிக்கு ஒரேயொரு நிலைப்பாடு மட்டுமே உள்ளது. அதாவது வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்களின் மூலம் தீர்வு காணப்படவேண்டுமே தவிர வேறு வழிகளில் தீர்வு காணமுடியாது என்பதே அதுவாகும்.

இன்று நாட்டு மக்கள் அதிகமானோருக்கு தேவைப்படுவது சமாதானமே. இனவேறுபாடு, மொழிவேறுபாடு, மதவேறுபாடு ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு நாட்டு மக்கள் அனைவரும் சமாதானத்தையே வேண்டி நிற்கின்றனர். வடபகுதி நிலைமையும் இதுவே. தென்பகுதி நிலைமையும் இதுவே.

நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் சமாதானப் பேச்சுகளின் விதியை இக்காரணத்தினாலேயே நாட்டு மக்கள் மிகவும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முக்கிய தடையாக விளங்குவது விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்ட முன்நிபந்தனைகளே ஆகும். பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதாயின் தமது அமைப்பு மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட வேண்டும் என விடுதலைப் புலிகள் ஆணித்தரமாக எடுத்துக் கூறியுள்ளனர். ஆனால அந்தத் தடையானது பேச்சுவார்த்தைகளை எவ்விதத்திலும் பாதிக்காது என்பதே அரசின் நிலைப்பாடு ஆகும். எனவே புலிகள் அமைப்பு மீதான தடை ஒருபோதும் நீக்கப்படமாட்டாது என அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இவ்வாறான பின்னணியிலேயே நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அமெரிக்க அதிகாரிகளை சந்திப்பதற்காக அண்மையில வாஷிங்டன் சென்றிருந்தார். அமெரிக்க விஜயத்தின் பின்னர் எரிக் சொலஹெய்ம் லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்திப்பார் என வெளிநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### பிரதமரின் உரை

சொல்ஹெய்மின் சமாதான தூதுவர் பணி இவ்வாறு நடைபெற்று வரும் வேளையில் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க ஹொரணை என்ற இடத்தில் நிகழ்த்திய உரையானது தற்போது சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது என்பது தெளிவாகிறது.

"இந்தப் பிரச்சினையை மென்மேலும் சர்வதேச மயமாக்காமல் தன்னால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதைப் புரிந்து கொண்டு இந்த விடயத்தை கை கழுவி விடுவதே நோர்வே பிரதிநிதி செய்யக் கூடிய பணியாகும்" என தனக்கு ஒருவர் தெரிவித்ததாக பிரதமர் ரத்னசிறி விக்கரமநாயக்க ஹொரணையில் தெரிவித்ததாக செய்திகள் வெளிவந்தன.

பிரதமரின் இந்தப் பேச்சுக்கு வெளிநாட்டுச் செய்தி ஊடகங்கள் முக்கியத்துவம் அளித்தன. ஆசிய நாடுகளைச் சேர்ந்த தூதரக அதிகாரிகள் சிலரும் சில செய்தி நிறுவனங்களும் பிரதம மந்திரியின் உரையை பௌத்த, சிங்கள இனவாத, மதவாத போக்குடையது என எடுத்துக் காட்ட முற்பட்டனர். மேலும் அந்த உரையானது நோர்வே நாட்டுக்கு எதிரான கருத்து என அவர்கள் கருதுவதாகவும் தெரியவருகிறது.

மற்றும் சிலர் பிரதமரின் உரை மூலம் அரசுக்குள் இருவேறு நிலைப்பாடு நிலவி 'வருவதாகக் கருதுகின்றனர். அரசுக்குள் ஒரு தரப்பினர் நோர்வேயின் சமாதான முயற்சிகளை ஆதரிப்பதாகவும் மறுதரப்பினர் எதிர்ப்பதாகவும் அவர்கள் கருதுகின்றனர்.

இவ்வாறு அரசுக்குள்ளே சமாதானம் தொடர்பாக இருவேறு நிலைப்பாடுகள் நிலவுகின்றன என்ற கருத்து உலக நாடுகளில் பரவும் போது அது சமாதான முயற்சிகளில் பெரிதும் பாதிக்கும் என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஒரு விடயம் தொடர்பாக அரசுக்குள் இரு வேறு நிலைப்பாடுகள் நிலவும்போது பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது கடினமான வியடமாகும். பிரச்சினைக்குத் தீர்வு காண எதிர்தரப்பின் ஒத்துழைப்பை பெறுவதும் கடினம்.

வடக்கு - கிழக்கு பிரச்சினையாகட்டும் அல்லது சமாதானப் பேச்சுக்கள் ஆகட்டும் அரசுக்குள் இரு வேறு பிரிவுகள் இருப்பின் முதலில் தங்கள் அரசுக்குள் ஓர் உடன்பாட்டுக்கு வந்த பின்னரே பிரச்சினைக்கு (சமாதானப் பேச்சுகள்) தீர்வுகாண முயலுங்கள் என விடுதலைப் புலிகள் அரசுக்கு அழுத்தம் கொடுக்கலாம். சர்வதேசமும் இவ்விடயத்தில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கலாம். அரசுக்குள் ஓர் உடன்பாட்டை காண முடியாவிடின் எவ்வாறு இப் பிரச்சினைக்கு அரசு தீர்வு காணப்போகிறது என்ற கேள்வி எழுவது இயல்பு. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும விடயத்தில் அரசு எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பையும் பெறவேண்டும் என பதில் இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது. எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பு கிடைக்காத காரணத்தினாலேயே அரசமைப்பு திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியவில்லை.

இவ்விடயம் தொடர்பாக அரசைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் இன்னும் எதிர்க்கட்சி மீது குற்றஞ் சுமர்த்தி வருகின்றனர்.

இவ்விதமாக எதிர்க்கட்சி மீது குற்றங்களைச் சுமத்துவதற்கு முன்னர் அரசு, தனக்குள் ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டும் என்பதை சொல்லித்தான் தெரியவேண்டுமா? மறுபுறுதில் ஓர் அரசுக்குள் ஒரு விடயம் தொடர்பாக ஒரு நிலைப்பாடு நிலவாவிடின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பைப் பெறுவது எவ்வளவு தூரம அரசியல் ரீதியாக நல்லொழுக்கம் நிறைந்தது என்ற கேள்வி எழுகிறது.

*தமிழில்: கஜனி*

இத்தகைய சூழ்நிலையில் எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பைக் கோருவது ஒரு நகைப்புக்கிடமான விடயமாகும்.

இது மிக முக்கியமான வேளையாகும். பரீட்சித்து பார்த்து காலத்தை வீணடிக்க முடியாது. அதேபோல் நாட்டின் எதிர்காலம் ஆபத்து நிறைந்ததாக அமைய இடமளிக்க முடியாது. 18 ஆண்டுகளாக இடம்பெற்றுவரும யுத்தத்திற்கு முடிவு காண முற்படும் போது அரசுக்குள் ஒரே நோக்கம், ஒரே நிலைப்பாடு, ஒரே கொள்கை ஆகியன மாத்திரம் நிலவ வேண்டும் ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்பை அரசு பெறுவதற்கு முன்னர் அரசிடம் பிரச்சினை தொடர்பாக ஒரு கொள்கை மாத்திரமே உண்டு என்பதை தெளிவுபடுத்த வேண்டும் அதன் மூலமே ஏனைய கட்சிகள், அமைப்புகள், பொதுமக்கள் ஆகியோரின் ஒத்துழைப்பை பெறவேண்டும். இதன் பின்னரே மறுதரப்பாருடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும். அவ்வாறு இல்லாவிடின் சமாதானப் பேச்சுக்கள் குறித்து திடமான நம்பிக்கை வைக்க முடியாது என மறுதரப்பார் (விடுதலைப் புலிகள்) தர்க்கிக்க முடியும். சர்வதேச சமூகமும் இத்தகைய தர்க்கத்தை ஏற்றுக்கொள்ளும். அப்படியாயின் என்ன நடைபெறும் என்பதை சிந்தித்துப் பார்ப்பது அரசின் பொறுப்பாகும். ✦



**ஆரம்பக் கல்வி மாணவரின் பெற்றோர்களுக்கான புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றிய கருத்தரங்கு சமீபத்தில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.**

**கருத்தரங்கில் கலந்துகொண்ட பெற்றோரின் ஒரு பகுதியினரையும் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.**

**வித்தியாலய அதிபர் சு.யோகராசா, ஒட்டுவெளி அ.மி.த.க. பாடசாலை அதிபர் எஸ்.சிவப்பிரகாசம், உரும்பிராய் பர்வதபத்தினி ஆலய பிரதம குரு மு.சோமசுந்தரக் குருக்கள் ஆகியோரும் காணப்படுகின்றனர். (ஒ-10)**

# பலாப்பழம் விலை வீழ்ச்சி

தற்போது பலாப்பழ சீசன் ஆரம்பமாகிவிட்டது. இம்முறை சந்தைகளுக்கு பலாப்பழங்கள் அதிகளவு கொண்டு வரப்படுவதால், அவற்றின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. சுன்னாகம், மருதனார்மடம் சந்தைகளில் பலாப்பழங்கள் விற்கமுடியாமல் உற்பத்தியாளரால் திருப்பிக்கொண்டு செல்லப்படும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளன. சராசரியாக 10 ரூபா முதல் 60 ரூபாவரை பலாப்பழங்கள் விலை போகின்றன.

இதேவேளை -

தென்மராட்சிப் பகுதியில் இருந்து திருடப்பட்டு எடுத்து வரப்படும் பலாப்பழங்களும் விலை மலிவுக்கு ஒரு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-27)

# வாசகர் திருமுகம்

## சமாதானமும் நாமும்

தற்போது நமது நாட்டில் பலரும் சமாதானத்தைப் பற்றி பலவிதமாகவும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பல அமைப்புக்கள் உண்மையாக இதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது சில போலிகளையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது,

அண்மையில் திருகோணமலை நகரத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் என்னால் அவதானிக்கப்பட்ட விடயங்களை 'உதயன்' வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

பல சமயங்களையும் சேர்ந்த சில பிரமுகர்கள் சேர்ந்து நாடளாவிய ரீதியில் செய்துவரும் ஒரு விசயம் அங்கும் நடைபெற்றது. இரண்டு நாள் நிகழ்வுகளில் அவர்களுடைய தொனிப் பொருள் சமயங்களின் புரிந்துணர்வின் மூலம் சமாதானத்தை முன்னெடுத்தல் என்பதாகும். நடைபெற்ற விடயம் என்னவெனில் மூன்றில் இரண்டு பங்கு நேரமும் ஒவ்வொரு சமயத்திலுமுள்ள தத்துவ ரீதியான, நடைமுறை ரீதியான சிக்கல்களைப் பற்றி மற்றைய மதத்தைச் சேர்ந்தவர்கள் கேள்வி கேட்டதும் அதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் நீண்ட விளக்கங்கள் கொடுத்ததுமாகும். கேட்கப்பட்ட சில கேள்விகள் வருமாறு:-

ஓம் எதைக் குறிக்கிறது?

மும்மூர்த்திகள் என்பதன் அடிப்படைக் கோட்பாடு என்ன?

முஸ்லிம் மதத்திலுள்ள இரு பிரிவுகளுக்கிடையேயான வேறுபாடு என்ன?

முஸ்லிம் மதம் ஏன் பழிவாங்கலை ஆதரிக்கிறது?

பின்னர் மோதல்களின் பின்னணி பற்றிச் சரித்திர ரீதியாக ஆராயப்பட்டது. இனங்கள் ஒன்றுக்கொன்று மோதிக் கொள்ளும் விடயமானது மக்களின் மரபணுவிலேயே பொதிந்துள்ள ஒரு விடயம் என்று கூட ஒரு சமயப் பெரியார் கருத்துத் தெரிவித்தார்.

சமய தத்துவங்களை ஆராய்வதோ அன்றி சரித்திர நிகழ்ச்சிகளை அலசுவதோ சமாதானத்தை முன்னெடுப்பதற்கு எவ்வாறு உதவும் என்று கலந்துகொண்டிருந்த சிலர் அடிக்கடி கேள்வி எழுப்பியிருந்தும் கூட சம்பந்தப்பட்ட பௌத்த துறவிகளும் மௌலவிகளும் மற்றும் பலரும் முன் சொன்ன பாணியிலேயே விடயத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

சமாதானம் பல பக்கங்களுக்கும் இழுபடும் ஒரு விடயமாகிப் போய் விட்டது.

*கொக்குவில்.* **வை.சந்திரபாலன்**

## உரத்து ஓலமிடுகின்றோம்!

யாழ். குடாநட்டின் ஆயிரமாயிரம் இளைய தலைமுறை எழுத்தாளர்களின் இதயத்துடிப்பாகவும் ஆன்மாவின் குரலாகவும் விளங்கிய 'உதயன்' பத்திரிகையின் வாராந்த சஞ்சிகையான 'சஞ்சீவி'யின் இடைநிறுத்தமானது பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் இதய வேதனையைத் தூண்டியுள்ளது. பல்வேறு வழிகளிலும் அடக்கி ஒடுக்கப்பட்ட எம்மினத்தின் இதய தாகங்களையும் வேதனைக் குரல்களையும் தாங்கி வெளிவந்த குடாநாட்டின் ஒரேயொரு ஆரோக்கியமான உயிர்த்துடிப்புள்ள இச் சஞ்சிகையின் இடைநிறுத்தமானது வளரத் துடிக்கும் இளைய தலைமுறை இலக்கிய கர்த்தாக்களை திக்குத் தெரியாத காட்டில் தவிக்க விட்டு ஓடி மறைந்துவிட்டது. உயிர்காக்கும் அருமருந்தே உன் உயிர் மூச்சு ஓய்ந்ததேனோ!

பொன்னான உனது இதழ்களை முத்தமிட்டுப் பழகிய எங்கள் எழுதுகோல்கள் தற்போது வெளிவரும் மஞ்சள் பத்திரிகைகளை (YELLOW PRESS) தொட மறுக்குதையா. குமுறும் எரிமலையாக, கொந்தளிக்கும் கடலாக, சீறியெழும் சர்ப்பமாக, சுற்றிச் சுழன்றடிக்கும் சூறாவளியாக பொங்கிப் பிரவாகித்துப் பாயும் எங்கள் உணர்வுகளை இலக்கியச் சுவையோடு வெளிப்படுத்தி வந்த உனது துணிவும், நேர்மையும், அஞ்சாமையும், உள்ளதை உள்ளபடி எடுத்தியம்பும் தன்மையும் எங்கே சென்றதையா?

களமின்றித் தளமின்றித் தட்டுத்தடுமாறித் தவிக்கும் எங்கள் வேதனைக குரல் உன் செவியில் விழவில்லையா! மின்னாமல் முழங்காமல் பொழிகின்ற மழை போல் சொல்லாமல் கொள்ளாமல் உன் உயிர் மூச்சு நின்றதேன் காரணந்தான் என்ன? சமூக் சீர்கேடுகளையும் இன்றைய வாழ்வியல் யதார்த்தங்களையும் அக்குவேறு ஆணிவேறாகக் கிழித்தெறிந்த உனது உணர்வுபூர்வமான சேவை இன்று ஆடியோய்ந்த பம்பரமாகவும் வேட்டையாடிக் களைத்த வேங்கை போலவும் வீழ்ந்து கிடப்பது நலிவுற்ற எம்மினத்தின் சாபக்கேடென உரத்து ஓலமிடுகின்றோம்.

**- ந.சத்தியபாலன்**
**- யாழ்.வதிரிவாசன்**

## வாகனங்களில் சினிமா பாடல்கள் வேண்டாம்!

அண்மைக் காலமாக 'பாடசாலை சேவை' வாகனங்களில் குறிப்பாக வான், பஸ்களில் மாணவர்கள் பாதுகாப்புக் கருதியும் பிற நல்ல தேவை கருதியும் முண்டியடித்துச் செல்வதைக் காணமுடிகின்றது.

இச் சேவைகளில் அதிகமானோர் தரம் 1 தொடக்கம் 6 வரையிலான மாணவர்களே அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கே குறிப்பிட வந்த விடயம் என்னவென்றால், நாம் வானொலியிலும் பிற ஊடகங்களில் கேட்டிருக்க முடியாத பல புதிய பாடல்களை 'பாடசாலை சேவை' வாகனங்களில் சென்று வந்த பிள்ளை(கள்) படித்துச் சுவைப்பது மிகவும் அதிசயிக்கத்தக்கதாக இருக்கின்றது. பிள்ளைகளைக் கேட்டால் 'அது வானில் கேட்ட பாட்டு' என்று கூறுகிறார்கள்.

உண்மைதான் பாடசாலை செல்லும் போதும் பாடசாலை விடும் போதும் பிள்ளை இவ்வாறான புதிய பாடலைக் கேட்டால் என்ன செய்யும்? இது பிள்ளையின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய ஒன்று.

எனவே இந்த வாகனச் சொந்தக்காரர்கள் 'சினிமாப் பாடல்' போடும் அதே நேரம் மாணவர்களுக்கு நன்மை பயக்கும் 'பொது விடயங்களையும்' 'பொது அறிவினையும்' றெக்கோடிங் (Recording) செய்து போட்டால மிகவும் 'புண்ணியகரமான' சேவையாக இருக்கும்.

"எனது வானில் வந்த பிள்ளை இண்டைக்கு பல்கலைக்கழகத்தை முடித்து வெளியேயும் பல்கலைக்கழகத்தினுள்ளும் இருக்கு" என்று மார்பு தட்டும் இந்த வாகனதாரர்கள் மேற்சொன்ன 'புண்ணிய கரமான' சேவையையும் செய்வார்களா? சம்பந்தப்பட்டவர்கள் தங்களை மாற்றிச் செயற்படுவார்களா?

*நல்லூர்* **- மாசிதன்.**

# சடலத்தை அடையாளம்காண உதவக்கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்9

விடத்தற்பளைப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டதாகத் தெரிவித்து நேற்று முன்தினம் பொலீஸாரால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட இனந்தெரியாத நபரின் சடலத்தை அடையாளம் காண்பதற்கு உதவுமாறு உறவினர்கள் மற்றும் பொதுமக்களிடம் வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

மேற்படி சடலம் கறுப்பு நிறக்காற்சட்டையும் நீலநிற ரீ சேர்ட்டும் அணிந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

---

உ

அம்பாள் துணை

## வாழ்த்துகின்றோம்

அருள்மிகு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பிரதம குருவும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான ஆதீன குருவும், சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தின் தலைவருமாகிய கிரியா கலாப முத்தாமணியாகிய சிவஸ்ரீ ஜம்புகேஸ்வரகுருக்கள் மஹேஸ்வரக் குருக்கள் அவர்கள் சர்வதேச இந்துமத குருபீடாதிபதியாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டமையை அறிந்து அளவிலா மகிழ்ச்சி அடைகின்றோம். இவர் தனது குடும்பத்துடன் சகல செல்வங்களும் பெற்று நீண்ட காலம் வாழவேண்டுமென எல்லாம் வல்ல அருள்மிகு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம். வாழ்க அவர் தொண்டுகள்.

**தம்பிப்பிள்ளை காசிநாதன் குடும்பத்தினர்**
முன்னாள் பிரதிப்பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

*சுதுமலை தெற்கு, மானிப்பாய்.* (88830)

---

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சோ.விமலசிங்கம்

*(இளைப்பாறிய ஆசிரியர்)*

சண்டிலிப்பாய் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய தர்மகர்த்தா சபையின் நீண்டகால உறுப்பினரும் செயலாளருமான

**அமரர் சோ.விமலசிங்கம்**

அவர்களின் திடீர் மரணம் குறித்து ஆழ்ந்த துயருறு கிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், கவலையையும் தெரிவித்துக் கொள் கிறோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்கு அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சண்டிலிப்பாய் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தான தர்மகர்த்தாசபையினர்.**

(88820)

---

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ன்னை டியில் 03 - 03 - 1971



ஆண்டவன் அடியில் 10 - 06 - 1992

### செல்வன் சி.சஜீந்திரன் (முகுந்தன்)

(G.C.E.(A/L) மாணவன் 1990)

அவனியிலே இங்கு ஆண்டு ஒன்பதென்ன
எத்தனை தான் போனாலும்
பவனிவரும் எம்மனதில் உன்னுருவம்
பாலகனே என்றென்றும்
தவநினைவோடுனைப் பெற்றோம் தரணியிலே
அதனால் தான் என்னவோ
அவமாகத் தவிக்கவிட்டு எம்மை
அமலனடி சேர்ந்தாயோ?
உடம்பனைத்தும் வாயாக அழுதாலும்
உறுதுயரம் ஒழிந்திடாதையா
இடம்படைத்த இதயமெல்லாம் கருக
எங்கொழிந்தாய் இந்நாள் உம்முயிரே?
"அடைக நீ சாந்தி"

உங்கள் பிரிவால் துயருறும்:
மம்மி,
தம்பிமார்: நந்தன், நிறஞ்சன், மேனன், கஸ்தூரி, கரன்,
மம்மா, மாமாமார், சித்தப்பாமார், அன்ராமார்
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

"திருமகள் வாசா'
*அல்வாய் கிழக்கு,*
*வட்டுவத்தை, அல்வாய்.*

*தகவல்:*
- குடும்பத்தினர்.

---

## விஞ்ஞான சங்கக் கருத்தரங்கு.

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பகுதி - டி சமூக விஞ்ஞானப் பிரிவினரின் கருத்தரங்குத் தொடர் இல. 1இல் 'அம்பாறை மாவட்டத்தல் கரையோர மாவட்டத்தை உருவாக்கும் கோரிக்கையும் அது தொடர்பான பிரச்சினைகளும்' என்ற கருப்பொருளில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கருத்துரை வழங்கவுள்ளார்.

எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணிக்கு புவியியல் மண்டபத்தில் மேற்படி கருத்தரங்கு நடைபெறவுள்ளதாக விஞ்ஞான சங்கத்தின் தலைவர் பேராசியர் இரா.சிவச்சந்திரன் அறிவித்துள்ளார். (ஐ-6)

## திவ்யபிரபந்த உரை

யாழ்ப்பாணம்,ஜூன்9

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் இன்று சனிககிழமை நடைபெறவுள்ள திவ்ய பிரபந்த உரையில் 'ஆழ்வாரின் மகிமை' பற்றிச் சைவப்புலவர் ந.சசிதரன் உரையாற்றவுள்ளார். (ஐ-10)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்9

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் கி.நடராசா தலைமையில் கல்லூரி திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி இ.குமாரவடிவேல் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-10)

## கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூன்9

கரவெட்டி பொன்னம்பல வித்தியாலயத்தின் ஆக்கத்திறன் கண்காட்சிப்போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் க.பொன்னையா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி.சிவராசா கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-10)

## நயினாதீவில் கள்ளு வீண்விரயம்

தென்மராட்சி,ஜூன்9

நயினாதீவு கள்ளுத் தவறணையில் தினமும் பெருமளவு கள்ளு நிலத்தில் ஊற்றப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

அண்மைக் காலமாக சீவல் தொழிலாளர்கள் வீடுகளில் கள்ளு விற்பனை செய்வது தடை செய்யப்பட்டதையடுத்து தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் கள்ளினைத் தவறணைக்கு வழங்குவதால் தவறணைக்கு வழங்குவது போக மேலதிகமாக உள்ள 190 போத்தல் கள்ளினை தினமும் நிலத்தில் ஊற்றுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தவறணையில் ஒரேயொரு கொள்கலன் (பைபர்) மட்டுமே உள்ளதால் உற்பத்தியாளர்களால் மாலை வேளைகளில் கொண்டுவரப்படும் கள்ளினை ஊற்றி வைக்கக் கூடிய கொள்கலன் இல்லாததால் காலையில் வழங்கப்படும் கள்ளினை நிலத்தில் ஊற்ற வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

---


**PHYSICS**

K.றமேஸ் (B.Sc.)

A/L 2002 ஆரம்பம்
"வெப்பவியல்" (HEAT)
சனி,ஞாயிறு - 4.00 p.m.
A/L 2003
"பொறியியல்"
(MECHANICS)
புதன், வியா. (5.00 p.m.)
A/L 2001 PAPER (LIGHT)

THIGAL
இணுவில். (C/17041)



வெளிவந்துவிட்டது

'சுற்றாடல் செயற்பாடு'

தரம் 3

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை யாழ்ப்பாணம்,
சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
(88842)



இலங்கை நிர்வாக சேவை
போட்டிப் பரீட்சை

S.L.A.S.


புதிய பிரிவு ஆரம்பம் : 10-06-2001
காலை 9.00 மணி

மட்டுப்படுத்தப்பட்ட S.L.A.S.
போட்டிப் பரீட்சை
ஆரம்பம்: 10-06-2001 காலை 10 மணி.

புதிய உயர் கல்லூரி
ஆசிரியா : குமாரவேல்
(88838) ஆரியகுளம் சந்தி, யாழ்.


---

## 55ஆவது பிறந்தநாள் நினைவு அஞ்சலி



### அமரர் வல்லிபுரம் மாணிக்கலிங்கம்

கருவுற்ற உயிர்களெல்லாம் காலனவன்
கட்டளைக்கு இரையாகிப் போகுமென்பது
ஆண்டவனின் எழுத்ததுவோ நீர் நிறைந்த
விழிகளிலே உங்கள் எழிலுருவம் தேடுகின்றோம்
எங்கள் ஏக்கமதை எடுத்துச் சொல்ல
வார்த்தைகள் ஏதுமில்லை

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

*566/3, கே.கே.எஸ்வீதி,*
*யாழ்ப்பாணம்.* (88829) மனைவி, பிள்ளைகள்.

---

## 16ஆம் நாள் துயர்பகிர்வு

கலாபூஷணம்,சிற்ப சக்கரவர்த்தி

### ஆறுமுகம் ஜீவரட்ணம் (ஆசாரியார்)

அவர்கள் கடந்த 24.05.2001இல் இறைபதமடைந்தார்.

அவர்களுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதோடு அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*41, கேசாவில் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/17035)

தா.சு.லோகநாதன் J.P.
குடும்பம்

---

## மரண அறிவித்தல்

### திருமதி கதிரேசு சின்னம்மா

பத்தமேனி அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கதிரேசு சின்னம்மா 07.06.2001 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு கதிரேசுவின் (மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், கந்தையா - இராசம்மா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரராஜசிங்கம் (கட்டட ஒப்பந்தக்காரர், அகில இலங்கை சமாதான நீதிவான்), இராஜசிங்கம் (CTB, OSE, Canada), செல்வராணி, ஜெயவீரசிங்கம் (PWD Officer, Canada) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகாதேவா (SPN Company, Colombo) கருணாதேவி (Nursing officer, Jaffna Hospital), சோபிதாலஷ்மி (Teacher), இந்திராணி (Canada) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயந்தன், கிரிசோபினி (Colombo), அனுசித்தா, அனுசீமா, அனுரேகா (Canada), காயத்திரி (Teacher, புனித திரேசா மகளிர் கல்லூரி), டயாணி (Canada), ஜனரஞ்சனி (யா/வேம்படி மகளிர் கல்லூரி), தட்ஷாயினி (யா/இந்து மகளிர் கல்லூரி), பற்றசன் கிருத்திகன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிஸான், டிலக்ஸி, டினேஸ் (Colombo) ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற இளயதம்பி, இரத்தினம், ராமநாதன் (R.D.O), முத்தையா, குமாரகுலசிங்கம் (Station master) ஆகியோரின் சிற்றன்னையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.06.2001) ஞாயிற்றுக்கிழமை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக பத்தமேனி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
த.இராமலிங்கம் (சகோதரன்)
மகாதேவா (மருமகன்)
பரராஜசிங்கம் (மகன்)

*பத்தமேனி,*
*அச்சுவேலி.* (88827)

# இந்த வார இராசி பலன்

## 10 - 6 - 2001 - 16 - 6 - 2001

### மகாதேவா ஜோதிடம்

(வியாழ மாற்றம்:- 13-06-2001 இல் மிதுனம் இராசிக்கு மாறும்)

| | | | |
|---|---|---|---|
| | வெ | சூ◄ புத வி சனி | ரா |
| | இராசிச் சக்கரம் | | |
| சந் | | | |
| செ கேது | | | |

மாற்றம்:-

*10 - 06 - 2001 இல் திருவோணம் - மகரம் இராசியில் சந்திரன் நிற்கும்.*

*13 - 06 - 2001 இல் வியாழன் மிதுன இராசிக்கு மாறும்.*

அரசியலில் ஒரு தளம்பல் நிலை ஏற்படும். அரசியல்வாதிகள் தடுமாறுவார்கள். உலக நாடுகளுக்கு ஒரு பிடிப்பற்ற நிலை ஏற்படலாம். இந்தியா புதிய அழுத்தம் கொடுக்கும். இந்தியாவில் அரசியலில் தெற்கு, வடக்கில் செல்வாக்குத் தேடும் கட்டங்கள் ஏற்படும். அரசுக்கு புதிய நெருக்கடிகள் தோன்றும். மேற்கு உலகம், கிழக்கு, மத்தியகிழக்கில் புதிய அழுத்தங்களைக் கொடுக்கும். பசிபிக், இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் இயற்கையின் சீற்றம் ஏற்படும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

விதி நேபாள மன்னர் விஷயத்தில் மட்டுமல்ல, எல்லோரது வாழ்விலும் விளையாடும். அவரவர் வாழ்வின் முற்பகுதியில் விதைத்ததை இறுதியில் அறுவடை செய்வார்கள். இதை அவரவரின் கிரக நிலைகள் காட்டி நிற்கும். தர்மத்தைச் செய்து கொண்டிருப்பீர்கள். பொதுத் தொண்டு செய்து காமராஜர் போல இருப்பீர்கள். பலரது அன்பைப் பெறுவீர்கள். ஒருவரின் பிரிவு அல்லது துன்பம் உள்ளத்தைத் தொடச் செய்யும். வயிற்றுநோ, காய்ச்சல், மனக்கலக்கம், தோல் வருத்தம் என்பன வரும். சுயநல சிந்தனை, அடிக்கடி மனதில் போராட்ட உணர்வைத் தரும். மருந்துத்துறை, செய்தித்துறை, நகைத்துறை, நிர்வாகத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு அதிக நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன்.

### இடபம்

பிறப்பு என்பது இறைவன் வகுத்த திட்டம். இறப்பு என்பது ஜனனக் குறிப்பில் உள்ளதும் அதன் கிரக நிலைப்படி நடந்து வந்த பாதையில் விளைந்த பாவபுண்ணியமும் சேர்ந்துவரும் அறுவடைப் பலனாகும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உதவி செய்வார்கள். இடமாற்றம் வரலாம். தொண்டைநோ, நெஞ்சுநோ, சலவருத்தம், வாதவிறைப்பு என்பனவரும். சந்தை வியாபாரம், தபால், தந்தித்துறை, கலைத்துறை, இசைத்துறை, வங்கித்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்:- புதன்.

### மிதுனம்

நல்லவர்களைக் காப்பாற்ற சட்டவாதிகள் உடன் நுட்பமான திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த வேண்டும். சட்டம் சாட்சி கேட்கும். தர்மம் சாட்சியற்ற தண்டனைகளைக் கேட்காமல் கொடுத்துத்தண்டிக்கும். நாம் மனிதர்கள். அந்தந்த நாட்டின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வாழப் பழகிக் கொள்ளல் வேண்டும் என எண்ணுவதில் தவறில்லை. தொழில் ஸ்தானத்தில் வேண்டா வெறுப்பு நிலை வரும். எதிர்ப்பாலாருடன் வாக்குக் கலகம் வரும். வீடு, வாகனத்தால் இலாபங்கள்கிடைக்கும். தலைவலி, முதுகுவலி, களைப்பு, வாதவாய்வுத் தொல்லை என்பன வரும். போக்குவரத்துத் துறை, நகைத்துறை, வியாபாரத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்:- புதன்.

### கடகம்

சுயநலம் மிக்க மனிதர்களிடம் நன்றியைப் பற்றி எதிர்பார்க்கக் கூடாது. காரியம் முடிந்ததும் மறந்து விடுவார்கள் பலர். சிலர் மறந்தது போல நடிப்பார்கள். இந்த நிலை தொழில் ஸ்தானத்தில் வந்து பதற்றத்தை உருவாக்கும். அடிக்கடி எதிர்ப்பாலாரால் மனப்பயம் வரும். அரச உதவிகள் கிடைக்கும். ஆயினும் எதிர்பார்த்தவை கிடைக்காது. அடிக்கடி மன மாற்றம், பதற்ற நிலை, வயிற்றுநோ, கைகால் பிடிப்பு என்பன வரும். நீதித்துறை, குருத்துறை, பாதுகாப்புத் துறை, அரசியல் துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நற்பலன் ஏற்படும்.

அதிர்ஷ்ட நாள்:- புதன்.

### சிங்கம்

நீங்கள் இலாபத்தைக் கருதி தொழில் செய்பவரல்லர். உண்மை, நீதியை நிலைநாட்டப் போராடி வெற்றி காண்பீர்கள். தொழில்ஸ்தானத்தில் புதுமைகள் நடக்கும். பதவிமாறும் நிலை ஏற்படும். மேலதிகாரிகள் உதவி செய்வார்கள். எதிர்ப்பாலாருடன் கலகம் ஏற்படும். சகோதரர்களுக்கு மாற்றங்கள் வர இடமுண்டு. குடும்பத்தில் கொண்டாட்டங்கள் வரஇடமுண்டு. உறவினர் ஒருவருக்கு உடல் நிலை, வைத்தியச்செலவு அதிகரிக்கும். வியாபாரத்துறை, குருத்துறை, அரசியல்துறை, மருந்துத்துறை போன்ற துறைகளில் தொடர்பானவர்கள் நற்பலன்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்:- புதன்

### கன்னி

பணமில்லாத அறிவும், அறிவில்லாத பணமும் உற்ற நேரம் கை கொடுக்காது. அறிவும், பணமும் ஒருவருக்கு இருந்தால் தானாக அவருக்கு துணிவுவந்து விடும். தொழில் ஸ்தானத்தில் எதிர்பாராத திசை திருப்பம் ஏற்படும். மாற்றங்கள் சகஜம். எதிர்ப்பாலாருடன் நிதானமாக இருக்கவும். குறை குற்றங்கள் வந்து போகும். தோல்வருத்தம், வயிற்றுநோ இரத்தநோய், சளி என தொல்லைகள் வரும். இசைத்துறை, விவசாயத்துறை, பிரயாணத்துறை, நிர்வாகத்துறை போன்ற துறையினர்கள் நற்பலன்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன்.

### துலாம்

தர்மத்தை நிலைநாட்ட எத்தனை போராட்டம் கண்டு அனுபவப்பட்டு தடை கடந்து வந்துள்ளீர்கள். ஆனால் மறைமுகத்தில் எதிரிகள் பல திட்டம் தீட்டியபடி தான் இருப்பார்கள் உங்களை அவர்கள் ஒன்றும் செய்துவிட முடியாது. திட்டமிட்டு முன்னேறுவீர்கள். படிப்படியாக உயர்பதவிகள் கிடைக்கும். புத்திரரால் யோசனைகள் வந்தாலும், மகிழ்ச்சி அடையாமல் இருக்க மாட்டீர்கள். தூரதேசச் செய்தி மகிழ்ச்சி தரும். குருத்துறை, சட்டத்துறை, விளையாட்டுத்துறை, இசைத்துறை, வியாபாரத்துறை தொடர்பானவர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன்.

### விருச்சிகம்

காலதேவனின் கணக்கில் பிறக்கும் உயிர்களுக்கு ஓர் அளவுத்திட்டம் உண்டு. மனிதர்களின் அளவுத்திட்டத்தின் அடையாளச்சின்னம் அவரவரின் ஜனனக்குறிப்பாகும். எனவே ஜனனக்குறிப்புப்படி ஆலோசனை பெற்று நடந்தால் இலாபங்கள் அடைவீர்கள். தொழில் ஸ்தானத்தில் ஒருவர் உங்களை அதட்டி உருட்டியபடி இருப்பார். இடமாற்றம் வாசல் வரை காத்திருக்கும். நண்பர்கள் மூலம் புதிய செய்தி ஒன்று மனத் திருப்தியைக் கொடுக்கும். அரசியல்துறை, மருந்துத்துறை, வியாபாரத்துறை சம்பந்தமானவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன்.

### தனுசு

உலகத்தை எப்படி நம்புவது? தொட்டிலில் வளர்த்த பிள்ளை பட்டியில் வந்ததும்–நன்றி மறந்து விட்டில் பூச்சி போல பறந்து போகுமா? என்று ஏங்குவது நல்லதல்ல. இயற்கையின் தாக்கத்தில் இப்படி எத்தனை எத்தனை விந்தைகள். மனிதர்கள் கடவுளையே காமுகன் என்று கேலிசெய்யும் விந்தைநிறைந்த உலகைப் பற்றி யோசிக்கின்றீர்களா? படபடப்பு தொழில் பீடத்தில் எதிர்ப்புக்கள் சர்வ சாதாரணம். பழிபாவம் நினைக்கவேண்டாம். அயலவர் குற்றம் சுமத்துவர். காயம், வயிற்று வருத்தம், இடுப்பு உழைவு, கால் வருத்தம் என்பனவரும். புடைவை, நகைத்துறை, எண்ணெய்த் துறை, வங்கித் துறை, போன்ற துறையினர்களுக்கு நற் பலன் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, திங்கள், புதன்.

### மகரம்

போர்க்களத்தில் அம்புத் திறன் இழந்து நாணிக் குறுகி நின்ற இராவணனின் நிலை போன்ற உணர்வு உங்களுக்கு. பொறுமையைக் கடைப் பிடித்து வாருங்கள். தொழில் ஸ்தானத்தில் வீண் குழப்பங்களை வீணாக ஏற்படுத்தி கீழ்நிலை அடையாமல் இருக்கவும். போக்குவரத்தில் கவனம். இடமாற்றங்கள் வர இடம் உண்டு. பெரியவர்கள் உதவி செய்வார்கள். கை கால் நரம்புப் பிடிப்பு, மூட்டுவலி, தலைப் பாரம், கை கால் நோ, வாய்வுத் தொல்லை என்பன இருக்கும். சட்டத்துறை, காசுத்துறை, ஆசிரியத்துறை, சந்தைத் துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு மாற்றங்கள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள்.

### கும்பம்

பதவி என்பது சாதாரணமாக ஒருவருக்குக் கிடைக்காது. நீதியற்றுநடந்தாலோ, கவலையீனமாகச் செயற்பட்டாலோ செய்யாத குற்றங்களுக்கு தண்டனைகளைக் கொடுத்து — வேதனையைத் தந்துவிடும். தொழில் ஸ்தானத்தில் ஒரு பதற்ற நிலை வரும். கை கால் வருத்தம், இருதயத் துடிப்பு — என்பன கொடுக்கும். தாய்வழிச் செய்திகள் வரும். பாதுகாப்புத்துறை, அரசியல்துறை, ஆசிரியத்துறை, இரும்புத் துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும்—முன்னேற்றங்களும் வரும்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு. திங்கள்.

### மீனம்

எதிர்பார்த்ததும் கிடைக்கும்; எதிர்பாராததும் கிடைக்கும். எது நல்லது என அடிக்கடி சிந்திப்பீர்கள். ஏன் அடிக்கடி கோபிக்கிறீர்கள்? உலகில் நல்லது கெட்டது மாறி மாறி நடக்கும் காலமாகும். பொருள் வரவு உயரும். மனச்சஞ்சலம் அதிகரிக்கும். சளித்தொல்லை, நரம்புவருத்தம், மறதி, இடுப்புநோ. கல்லீரல் வியாதி, அஜீரணம், சிலவேளை பித்தக் கொதிப்புக் காய்ச்சல் என்பன கொடுக்கும். வயிற்று வருத்தமும், விட்டு விட்டு கொடுக்கும். வியாபாரத் துறை, மருந்துத்துறை, எழுத்து அல்லது பத்திரிகை செய்தித்துறைகள், சட்டத் துறை போன்ற துறையினர்களுக்கும்மாற்றங்கள் கொடுக்கும்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, திங்கள்.

## வல்லிபுர ஆழ்வார் கும்பாபிஷேகம்

வலி. வடக்கு, ஜூன் 9

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் புனராவர்த்தனபணிகள், பல லட்சம் ரூபா செலவில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை ஆரம்பமாகவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அடியார்களின் போக்குவரத்து நன்மை கருதி வட பிராந்திய போக்குவரத்துச் சபையினால் ஆலயத்திற்கு விசேட பஸ்சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

[ஐ-86]


## கண்ணீர் அஞ்சலி

சிற்பச்சக்கரவர்த்தி, கலாபூஷணம்

ஸ்தபதி

**ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆசாரியார்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்தம் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபை


ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரசுவாமி தேவஸ்தானம்.

கல்வியங்காடு. (88826)



## நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

மண்ணுலகில் 12 – 09 – 1920



விண்ணுலகில் 09 – 05 – 2001

பன்னாலை

**திருமதி செல்வநாயகி இரத்தினம்**

இல்லக விளக்கும் ஆகி
இனிய நல் தெய்வம் ஆகி
நல்விதம் குடும்பம் காத்து
நயமுறப் பணிகள் ஆற்றி
சொல்லரும் தெய்வ பாதம்
சிந்திக்கும் உள்ளம் பெற்றே
எல்லையில் தெய்வ பாதம்
எய்தினை வணங்குகின்றோம்.

அன்னார் சிவகதி அடைய வேண்டி பன்னாலை மயிலையம்பதி ஞானவயிரவர் ஆலயத்தில் நாளை (10-06-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கும்ப வழிபாடு, சகஸ்ர நாம அர்ச்சனை, மோட்ச அர்ச்சனை, ஆத்ம சாந்தி உரைகள், மாகேஸ்வரபூசை (அன்னதானம்) என்பன நடைபெறவுள்ளன. உறவினர்கள், அன்பர்கள் அனைவரும் கலந்து பங்கு கொள்ளுமாறு பணிவுடன் அழைக்கின்றோம்.

திருப்பணிச் சபை,
ஞானவயிரவர் தேவஸ்தானம்,
பன்னாலை, தெல்லிப்பழை.

[88790]

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், இல.58/1, கலட்டி அம்மன் வீதியில் பயன்தரும் மரங்களுடன் 4 பரப்புக் காணியில் 4 அறைகள், களஞ்சிய அறை, வாகனத தரிப்பு அறை போன்றவற்றுடன் சகல வசதிகளையும் கொண்ட, அமைதியான நல்ல சூழலில், குடியிருப்பதற்கு உகந்த வீடு விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசித் தீர்க்கலாம். தொடர்பு: **M**.நவரட்ணராசா, இல.12, 6ம் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (88783)

## இலகு திருமணசேவை

1964 திருவாதிரை செவ்வாய் 7, குற்றமுள்ள பட்டதாரி உத்தியோக மணப்பெண்ணுக்கு அரச, தனியார் துறையிலும், 1970 ரேவதி செவ்வாய் 7 குற்றமுள்ள பட்டதாரி மணப்பெண்ணுக்கும் **Profesional/Degree** தரத்திலும் மணமகள் தேவை. துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்பபாணம். தொடர்பு: ஞாயிறுகளில். (88681)

## திருமண சேவை

1966ஆம் ஆண்டு ஆசிரியர், 1972ஆம ஆண்டு **B.Com**, 1967ஆம் ஆண்டு **B.A** விரிவுரையாளர், 1967 ஆம் ஆண்டு **B.A** ஆசிரியர், 1970ஆம் ஆண்டு பாடசாலை கிளாக், 1972ஆம் ஆண்டு கணித ஆசிரியர், 1972ஆம் ஆண்டு **B.Sc.** (விரிவுரையாளர்), 1969ஆம் ஆண்டு **B.Sc. (A.O)**, 1970ஆம ஆண்டு விரிவுரையாளர், 1970ஆம் ஆண்டு **O.D.T** ஆகிய செவ்வாய்த் தோஷம் அற்ற மணமகன மாருக்கு மணப்பெண்கள் தேவை. தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை, இல.3,கு.அருந்ததி, கச்சேரி நல்லூர் றோட், மூத்த விநாயகர் வீதி, யாழ்ப்பாணம். (நேரில்சந்திக்கவும்) (88805)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 25 வயதுடைய மிருகசீரிடம் 4ஆம் பாதம், 5'.5" உயரமுடைய பட்டதாரி மணமகளுக்கு உள்ளூரில் என்ஜினியர், டாக்டர் அல்லது அரச, தனியார் துறையில் உயர் பதவி வகிக்கும் மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். கொழும்பில் வீடு, காசு, சீதனமாக வழங்கப்படும். விள. இல.1300, மே/பா உதயன். (88789)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சைவ போசனமுடைய விசாக நட்சத்திரம் 3ஆம் பாதம், 1962இல் பிறந்த, 7இல் செவ்வாயுள்ள பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியைக்கு தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். அரச தொழில் புரிபவர்கள் விரும்பத்தக்கது. சீதனம் வழங்கப்படும். தொடர்பு: ஆ.சபாரத்தினம், 37/22 **A**, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (88809)

## புறொயிலர் விற்பனைக்குண்டு

புறொயிலர் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (சுத்தம் செய்து கொடுக்கப்படும்) 1**kg** ரூபா 140/- மட்டுமே. 38/10, மருதடி வீதி, யாழ்ப்பாணம்.(88821)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 38 வயது, சித்திரை நட்சத்திரம் முதலாம் கால், பாவம்6, தனியார் கம்பனியில்"**COMPUTERIST**" ஆக வேலை செய்பவருக்கும்/சுவிஸில் நிரந்தர குடியுரிமை பெற்ற 32 வயது, சுவாதி நட்சத்திரம், 7இல் செவ்வாய், 52 பாவம் உள்ள மணமக்களுக்கு அழகிய மணமகள் தேவை. கொழும்பில் திருமணம் செய்வார். தொடர்பு திருஞானசம்பந்தமூர்த்தி, 314, கோயில் வீதி, நல்லூர் **T.P.** 3409. (88847)

## இலக்கியக் கட்டுரைகள்

**A/L** மாணவர்களே, 12 சிறுகதைகள், 'வீடற்றவன்' நாவல், 'பொருளோ பொருள்' நாடகம் ஆகியவற்றுடன் இலக்கிய விமர்சனத்துக்கும் விளக்கம் எழுதியிருக்கிறார். எல்லாவகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. வாசித்துப் பயனடையுங்கள். (88828)

## திருமண நிலையம்

எண் சோதிட முறைப்படி உங்கள ஆங்கில பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமான மணமகன், மணமகளைத் தெரிவு செய்து திருமணம் முடிதது வைப்போம். திருமணமாகாத ஆண், பெண் இருபாலாரும் சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: எண்கலை ஆசான் சி.சி.கே.ஸ்ரீராஜராஜேஸ்வரன், வித்தனை வீதி, வல்வெட்டித்துறை. (88787)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் வேண்டிய நிறையில் குறைந்த விலையில் கிடைக்கும். வாடிககையாளருக்கு விசேட கழிவுடன் வழங்கப்படும். காலை 6 மணி தொடக்கம் மாலை 6மணிவரையும் கிடைக்கும். தொடர்பு: லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (88818)

## காணி விற்பனைக்கு

ஆனைப்பந்தி சந்திக்கு அண்மையில் 5 3/4 பரப்புக்காணியும், வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: திருமதி பாலசுசீலா-தயானந்தன், 61/2, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். ஒவ்வொரு நாளும் 3 மணிக்குப் பின்பு சந்திக்கலாம். (88819)

இருபாலை ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்துக்கு அண்மையில் 66 பரப்பு வயலும் தென்னங்காணியும் கடையிற் சுவாமி ஒழுங்கையில் 3 1/2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி இரகுநாதமுதலியார், 39, பிறவுண் வீதி, நீராவியடி. (88595)

யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக இல.558 இல் ஒரு பரப்புக் காணியில் இரு கடைகள் விற்பனைக்குண்டு. ஒவ்வொரு கடையும் தலா **15'x30'** விஸ்தீரணம் உடையவை. தொடர்புகளுக்கு: **T.P** 597450/077-307227. **(C/17039)**

## இறைச்சிக்கோழி விற்பனை

Broiler, Cullbirds, Cockerels இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் காலை 6.30 - மாலை 6.00 வரை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (88676)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: சங்கீத், 40 விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (கல்வியங்காட்டுச் சந்தைக்கு அண்மையில்) (88831)

## இறைச்சிக்கோழி

புறொயிலர், சேவல், கல்பேட் என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம். 31, மான்ஸ் பாடசாலைவீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (88836)

## புறொயிலர் குஞ்சுகள்

புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வை.சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடி. அல்லது 'கிளீன் சொட்' பின்புறம் யாழ். பஸ் நிலையம், அல்வாயில் றஞ்சிதன், சுபகணநாதன் பண்ணை வீதி, மாலிசந்தி. (88824)

---

## பெரிய வெங்காயம் விலை குறைப்பு

கொழும்பு,ஜூன்9

பெரிய வெங்காயத்தின் விலை தற்பொழுது குறைக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் அறிவித்துள்ளது.

இதன்படி அதன் புதிய மொத்த மற்றும் சில்லறை விலைகள் உடன் நடைமுறைக்கு வரவுள்ளது.

முன்பு 37 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த பெரிய வெங்காயத்தின் தற்போதைய சில்லறை விலை 33 ரூபாவாகவும் 34 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்பட்டு வந்த அதன் மொத்த விலை 29 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது என்று கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் தெரிவித்துள்ளது.

(ம-10)

# 16ஆம் நாள் நினைவஞ்சலி



சிற்பச்சக்கரவர்த்தி,
கலாபூஷணம்
**ஸ்தபதி ஆறுமுகம்**
**ஜீவரட்ணம் ஆசாரியார்**

அவர்களது 16 ஆம் நாளாகிய இன்று அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அம்பாளைப் பிரார்த்திப்பதோடு, பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

*கொக்குவில் – நந்தாவில்*
*கற்புலத்து மனோன்மணி அம்பாள்*
*ஆலய பரிபாலனசபை.*

(88823)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 24 - 09 - 1921 | 10 - 05 - 2001 |



## அமரர் கந்தையா இராசையா

(இளைப்பாறிய அசிரியர்)

அமரரின் மரணச் செய்திகேட்டு எம் துயரில் கலந்து கொண்டு இறுதிக் கிரியைகளின் போது பல வழிகளிலும் உதவி புரிந்து எமக்கு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்வதோடு இன்று (09-06-2001) சனிக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*ஈவினை,*
*புன்னாலைக்கட்டுவன்.*

(88833)

# ஓராண்டு நிறைவினில் ஓயாத துயரினில்

| மண்ணுலக இணைப்பு | விண்ணுலக அணைப்பு |
| --- | --- |
| 16 - 04 - 1939 | 22 - 05 - 2000 |



## அமரர் தம்பிஐயா தங்கராசா

(முன்னாள் ஊழியர், இ.போ.ச. )
*(11/1, பொன்னம்பலம் றோட், அரியாலை).*

**திதி: 09.06.2001**

**பகை கொண்ட ஷெல்கள் பலி கொண்ட பட்டியலில்**
**வகையின்றி மடிந்தோரில் வாடிய எம் தங்கமே!**
**மறைந்த உன் செய்தி கூட மாதம்பல கழிந்து தானே**
**உறுதிபடத் தெரிந்ததையா உள்ளமெல்லாம் நொந்ததையா**
**அருகிருந்த போதும் நீ தூரமானாய், துயரமானாய்...**
**இறுதி உன் ஆத்மா இறைவனடி சேரட்டும்.**

| | |
| --- | --- |
| மனைவி: | சரோஜா, |
| பிள்ளைகள்: | ரமேஷ், சரோஜினி, ரணேஸ், நரேஷ், கரேஷ், சிராஞ்சினி, |
| மருமக்கள்: | ரவிக்குமார், பேபி, |
| பேரப்பிள்ளை: | ஜஸ்மின், |
| சகோதரர்கள்: | ராஜமலர், கனகமலர், றஞ்சிதமலர். |

தற்போதைய முகவரி:
*81, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.*

(88835)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டி அழைப்பும்

| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
| --- | --- | --- | --- |
| 20 - 03 - 1919 | 10 - 05 - 2001 | 19 - 03 - 1920 | 01 - 05 - 2001 |





**அமரர்**
**நாகர் கிருஷ்ணபிள்ளை**

**அமரர்**
**சின்னத்தம்பி செல்லம்மா**

அன்புடனே அரவணைத்து - எம்
அனைவரையும் காத்து நின்று
அணைந்துவிட்ட தீபங்களே - இன்று
அஞ்சலிகள் தருகின்றோம் சேர்ந்தே நாம்!

அமரர்களின் அந்தியேஷ்டிக் கிரியைகள் இன்று (09-06.2001) சனி காலை 7.00 மணிக்கு அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிலில் நடைபெறும். மேற்படி கிரியையிலும் நண்பகல் 12.00 மணிக்கு எமது இல்லத்தில் நிகழும் சபிண்டீகரணக் கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

**- குடும்பத்தினர்**

*"தவமஹால்"*
*அல்வாய்.*

(88825)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 1942 - 03 - 29

ஆண்டவன் அடியில் 1999 - 06 - 03

## அமரர் முத்துக்குமாரு நடராசா
**(Land Officer)**

*திதி : 09-06-2001 (சதுர்த்தி)*

தள்ளாடும் வயதினிலே தனயனை - நான்
தேடிநிற்க!
உன் உடன் பிறப்புக்களொடு - உற்றாளும்
உனைத்தேட!
ஐயனே! உம் வழியை ஐவர் - நாம்
பார்த்து நிற்க!
கடமையெனச் சென்ற உம்மை
காலனவன் கவர்ந்ததேனோ?
உம் ஆசை நிறைவேற உழைப்போம் - நாம்
உம் வழியில்! பெறுக சாந்தி.

என்றும் உங்கள் ஆத்ம
சாந்திக்காகப் பிரார்த்திக்கும்,
குடும்பத்தினர்.

*இடைக்குறிச்சி,*
*வரணி.* (88837)

---

# ராஜா யாழ்ப்பாணம்

பிரசாந்த், கரண்,
சிம்ரன், விவேக்
மற்றும் பலர் நடிப்பில்

## கண்ணெதிரே தோன்றினாள்

தினசரி காட்சிகள : 10.30, 2.30 (புதியநேரம்)
சனி, ஞாயிறுகளில் 10.30, 2.00, 5.00 (பு.நே.)

15.06.2001 முதல்
**சிட்டிசன்!**

(C/17060)

---

# நாகம்ஸ்
சுன்னாகம்

அர்ஜுன், அபிராமி,
பிரகாஷ்ராஜ் நடித்த

## வானவில்

(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)

(88694)

---

# லஷ்சுமி இணுவில்

இன்று முதல்
சரத்குமார், தேவயானி,
ஆனந்த்ராஜ்
நடிப்பில்

## பாட்டாளி

(ரீல்ஸ்)
காட்சிகள் : 10.30, 2.30 (ப.நே.)

(88865)

---

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம: ஸ்ரீ மீனாட்சி அம்பிகை துணை

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருஷம் வைகாசி மாதம் 27ஆம் நாள் நாளை (10-06-2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணி முதல் 12.00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**மகேந்திரன்** (ராசன்)
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**கவிதா**
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு மணமகள் இல்லத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் குடும்ப சகிதம் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். எல்லோருக்கும் தனியான அழைப்பு வழங்கமுடியவில்லை. இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*தங்கள் நல்வரவை நாடும்:*

**திரு.திருமதி மாணிக்கம் சரஸ்வதி**
*நிரந்தர முகவரி:-*
*மீனாட்சி அம்மன் வீதி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.*
*தற்காலிக முகவரி :-*
*மூத்த விநாயகர் கோயிலடி,*
*கரணவாய் தெற்கு, கரவெட்டி.*

**திரு.திருமதி வைரவநாதன்**
குடும்பத்தினர்
*நீர்வேலி குறுக்கு றோட்,*
*நீர்வேலி.*

**இருவீட்டார் அழைப்பு**

(88853)

---

உ
ஓம் விராட் விஸ்வப் பிரமமனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருஷம் வைகாசித் திங்கள் 27 ஆம் நாள் நாளை (10-06-2001) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.43 மணி முதல் 12.05 மணி வரையுள்ள திருவோண நட்சத்திரமும் அமிர்தயோகமும் சிங்கலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**பாலகிருஸ்ணன்** (பாலன்)
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**ரஜனி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
மணமகன் இல்லத்தில் 11-06-2001 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு வரவேற்புபசாரம் நடைபெறும்.

*தங்கள் நல்வரவை நாடும்:*

**திருமதி.கிருஸ்ணசாமி**
**அன்னலெட்சுமி** குடும்பத்தினர்
*88, பத்திரகாளி கோயிலடி,*
*வண். வடமேற்கு, யாழ்ப்பாணம்.*
**கி.பாலகிருஸ்ணன்** - பத்தர்
பாலன்
*கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை.*

**திரு.திருமதி.சுப்பிரமணியம்**
குடும்பத்தினர்
**திரு.சு.குமார்** ~ சகோதரன்
*நாகலிங்கம் சுவாமி வீதி,*
*சங்கானை.*

**இருவீட்டார் அழைப்பு**

(88841)

---

# நினைவஞ்சலியும்
## சபிண்டீகரண அழைப்பும்



தாய் மடியில் 01 - 11 - 1908

இறை அடியில் 20 - 05 - 2001

## அமரர் கதிரேசர் ஆறுமுகம்
(கோப்பாய்)

நிறைவான வாழ்வு கண்ட பெருந்தகையே,
இறைவனுடன் இரண்டறக் கலக்கும்
பேரின்ப வாழ்வு தாங்கள் பெறவேண்டி
பொருமானை மனமார வேண்டுகின்றோம்.

இன்று (09.06.2001) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொண்டு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*16, கடையிற்சுவாமி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (88797)

---



### திருப்பணி நிதி
# அநுராதபுரம்
# ஸ்ரீ முத்து மாரியம்மன் கோயில்

271, தேவநம்பியதிஸ்ஸபுர (நீராவியடி)
பதிவு இல. HA/6/AP/3

**சைவப் பெருமக்களே!**

அநுராதபுரத்தில் இந்து மக்கள் செறிந்து வாழும் மேற்படி கிராமத்தில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக இந்து மத வளர்ச்சியற்ற கஷ்டமான நிலையில் ஏற்பட்ட மதமாற்றங்களைத் தவிர்த்து மீண்டும் இந்து தர்மத்தை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்ட பரிபாலன சபையினர் கடந்த 01.06.2000 முதல் பூசைகள் நடத்த ஒழுங்கு செய்தனர். 09.04.2001 பங்குனித் திங்கள் அன்று ஆலயத் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகின்றன. இத்திருப்பணிக்கு இலங்கை வாழ் இந்துக்கள் நிதி உதவி வழங்கி அம்பாள் அருள் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கணக்கு இல:-1-009426-0
இலங்கை வங்கி பசார் கிளை
அநுராதபுரம்.

- பரிபாலன சபையினர்
T.P.025-23561

மேலதிக விவரங்களுக்கு:
***சிவஸ்ரீ க.சோமசுந்தரக்குருக்கள்***
*சிவகிரி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

(88839)

---

# வாழ்த்தி வணங்குகின்றோம்

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய பிரதம குருவாகிய
**பிரம்மஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள்**
அவர்கள் சர்வதேச இந்து மத குரு பீடாதிபதியாகப் பதவியேற்றதையிட்டும் அவரின் பணிகள் மேலும் சிறக்கவும் வாழ்த்தி வணங்குகின்றோம்.

*ஆலடிச் சந்தி, மானிப்பாய்,* *பிரவின்ஜா ஜுவல்லறி.*
*கே.கே.எஸ் வீதி, இணுவில்,* *புதிய கஜீபன் நகைமாடம்.*

(C/17040)

---

# வலி.தென்மேற்கு இந்து ஆலயங்களின் மகா சபை
## விசேட பொதுக் கூட்டம்

**காலம்:- நாளை (10-06-2001) ஞாயிற்றுக்கிழமை**
**நேரம்:- காலை 10.00 மணி (இலங்கை நேரம்)**
**இடம் :- மெமோறியல் ஆங்கில பாடசாலை, மானிப்பாய்.**

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரிவில் உள்ள இந்து ஆலயங்களின் பரிபாலனசபைத் தலைவர், செயலாளர் அல்லது தலைவரினால் அனுமதியளிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் தவறாது சமுகம் தரவும்.

க.சிவகுமாரன்
*தலைவர்*

(C/17045)

ந.விவேகானந்தராசா
*செயலாளர்*

# நாகர்கோயிலில் மோதல்

கொழும்பு,ஜூன்9

நாகர்கோயில் முன்னரங்க நிலைகளுக்கு அருகே நேற்று முன்தினம் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் இடம்பெற்றதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்த மோதலில் விடுதலைப் புலிகளின் ஐந்து உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்றும் தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

எழுதுமட்டுவாழ் பகுதியில் அதே தினம் படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது மரம் ஒன்றுக்குக் கீழே நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு ரி 56 ரக ஆயுதம் மீட்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## சடலம் புலிகளிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்9

ஆனைக்கோட்டைப் பகுதியில் கடந்த 3ஆம் திகதி படையினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார் எனத் தெரிவித்து யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று செஞ்சிலுவைச் சர்தேசக் குழுவினரால் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்.ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த மேற்படி இளைஞரின் சடலத்தை நேற்றுக் காலை 9 மணியளவில் பொறுப்பேற்ற படையினர் குருநகர் இறங்குதுறையில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் அதனை ஒப்படைத்தனர். பின்னர் செஞ்சிலுவை அதிகாரிகள் படகு மூலம் சடலத்தை எடுத்துச் சென்று கல்முனைப் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிடம் கையளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-7-6-15)

## வில்பத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு ஒன்றை விமானப்படை அங்கு அனுப்பியுள்ளது.

அதேவேளை -

குறிப்பிட்ட விமானம் எந்தவித தாக்குதல்களையும் எதிர்நோக்கவில்லை என்று விமானிகள் உறுதி செய்துள்ளதாகவும் -

விமானத்துக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லை என்றும் - விமானப்படையினர் தெரிவித்தனர்.

பொதுமக்கள் தெரிவித்த தகவலை உதாசீனம் செய்ய முடியாது என்றும் -

இதனால் இது பற்றி ஆராய குழு ஒன்றை அங்கு அனுப்பியுள்ளதாகவும் -

விமானப்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர். (உ-3-4)

## 2 படையினர் காயம்

கொழும்பு,ஜூன்9

முகமாலை மற்றும் நுணாவில் பகுதிகளில் உள்ள படையினரின் நிலைகள் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார்த் தாக்குதலில் படையினர் இருவர் காயமடைந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (உ-3)

## தடையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானம் அங்கு நிறைவேற்றப்பட்டது.

அதேவேளை -

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பு ஒன்று ஐ.தே.கட்சி எம்.பியான எம்.எஸ்.செல்லச்சாமி தலைமையில் நேற்றுக்காலை நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுள்ளது.

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று அங்கு எடுத்துக் கூறப்பட்டதாகத் தெரிய வந்தது. (உ-3-4)

## சமாதான முயற்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு சம்மதம் தெரிவித்ததை அடுத்து -

அந்த விவகாரத்தைக் கையாளும் பொறுப்பை விசேட தூதராக நியமிக்கப்பட்ட எரிக் சொல்ஹெய்மிடம் நோர்வே அரசு ஒப்படைத்திருந்தது.

இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அவர் பல தடவைகள் இலங்கை வந்தும், லண்டன் சென்றும் அரசு மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களை நடத்திவந்தார்.

இலங்கை அரசின் போக்கை விமர்சிக்கும் விதத்தில் அவர் கருத்துக்களை வெளியிட்டுவந்ததாகக் கூறப்படுவதை அடுத்தும் -

அவருக்கு எதிராக தெற்கில் உருவாகியுள்ள எதிர்ப்பலைகளை அடுத்தும் -

விடுதலைப் புலிகள் புதிய கோரிக்கைகளை முன்வைப்பதற்கு இவரே காரணமானவர் என இலங்கை அரசு கருதியதை அடுத்தும் -

அவரை இந்த விவகாரத்தில் இருந்து ஒதுக்க இலங்கை அரசு தீர்மானித்ததாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பின்னணியில் ஜனாதிபதியின் விசேட அழைப்பின் பேரில் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் த்ரொப்ஜோன் ஜக்லண்ட் கொழும்புக்கு நேற்றுமுன்தினம் வந்தார்.

அவருடன் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்மும் கொழும்பு வந்திருந்தார்.

ஆனால் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுக்களில் அவர் கலந்துகொள்ள அழைக்கப்படவில்லை.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் மட்டுமே ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினார். இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் அச்சந்திப்பில் பங்குகொண்டார்.

இந்தப் பேச்சுத் தொடர்பாக வெளிவிவகார அமைச்சு நேற்றிரவு விடுத்த செய்திக்குறிப்பில் -

"விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்ட சமாதான நடைமுறைகளை மேலும் முன்னேற்றுவதற்காக நோர்வே அரசு எதிர்காலத்திலும் உயர்மட்டப் பங்களிப்பை வழங்கும் என்று நோர்வே நாட்டு வெளிவிவகார அமைச்சர் உறுதியளித்துள்ளார். ஜனாதிபதியுடன் நடந்த சந்திப்பில் இதை அவர் தெரிவித்தார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நோர்வே நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜக்லண்ட்டுடன் எரிக் சொல்ஹெய்மும் சென்று சந்தித்தார் என நேற்றைய உதயனில் வெளியான செய்தி தவறானது என்பது தற்போது தெரியவந்துள்ளது. (உ-3-7)

## 2 சிப்பாய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பவர் கொல்லப்பட்டார்; அங்கு பணியில் ஈடுபட்டிருந்த ஊர்காவலர் ஒருவர் காயமடைந்தார். அவர் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-3-4-164)


**யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றம் நடத்தும்**
**க.பொ.த. (உயர்தர) ஓகஸ்ட் 2001 வணிக மாணவர்களுக்கான**
**இலவச கருத்தரங்கும் வேலைப்பட்டறையும்**

| கருத்தரங்கு நடைபெறும் இடங்கள் | நடைபெறும் திகதிகள் |
|---|---|
| யாழ்.மத்திய கல்லூரி | ஜூன் 11ஆம், 12ஆம் திகதிகள் (திங்., செவ்.) |
| நெல்லியடி மத்திய கல்லூரி | ஜூன் 16ஆம், 17ஆம் திகதிகள் (சனி, ஞாயிறு) |

கருத்தரங்கு நேர அட்டவணை

| நேரம் | ஜூன்11/16 | ஜூன்12/17 |
|---|---|---|
| 9.00 - 10.30 | வர்த்தகம் | பொருளியல் |
| 10.30 - 12.00 | கணக்கியல் | கணக்கியல் |
| 12.30 - 2.00 | பொருளியல் | வர்த்தகம் |

இது தொடர்பாக பாடசாலைகளுக்கு தனித்தனியாகக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கடிதம் கிடைக்கப்பெறாத பாடசாலை மாணவர்களும் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளலாம்.

வணிக மாணவர் மன்றம்
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

(88832)



நிரு ரூசன் சென்றர்
கோண்டாவில்.
2003
சந்தைப் பொருளாதாரம்
ஆரம்பம்:- 09.06.2001
சனி 9.00 மணி
ஆசிரியர்:- திரு. P.சண்
(88863)



LOGIC
'வெளிவந்துவிட்டது'
"விஞ்ஞானிகளும கோட்பாடுகளும்"
ஆசிரியர்:-
S.R.J.சுதன்
இந் நூல் கிடைக்கும் கல்வி நிலையங்கள்
- கலைக்கல்லூரி - யாழ்.
- கலையகம் - ஆவரங்கால் - புத்தூர்
- ஈசன் கல்வி நிலையம - கோண்டாவில்
- யங் றோயல் - நெல்லியடி

(88800)



## மரண அறிவித்தல்

### அமரர் முருகர் முத்து

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் தற்போது சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு முன்பாக வசித்து வந்தவருமாகிய முருகர் முத்து நேற்று (08-06-2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் முத்து மீனாட்சியின் அன்புக் கணவரும், மகேந்திரன் (இ.மி.ச.), மகேஸ்வரி, மனோன்மணி, மங்களேஸ்வரி, மனோகரமூர்த்தி, மனோறஜி, மதனி ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேஷ், மதியழகன், யோகேஸ்வரன் (டென்மார்க்), றஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், கந்தசாமியின் அன்பு மைத்துனரும் தனலட்சுமியின் அன்புச் சகோதரனும் தஞ்சிகா, தன்ஜெயன், ஜானுகா, வஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (09.06.2001) சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இந்துக்கல்லூரி வீதி,*
*மானிப்பாய்.*

தகவல்:
அ.கந்தசாமி
(மைத்துனர்)

(88866)



**விஷேட சலுகை விலையில்**

MIPAQ PENTIUM III 733 MHZ
- Gigabyte Main Board
- 64 MB Ram
- 20.4 GB HDD
- 8 MB AGP
- 14" Monitor
- ATX Power
- PS/2 Keyboard & Mouse
- 52X CD-Rom
- 32 Bit Sound Card, Speakers
- 56 K Modem

Rs. 59,500.00 Upwards

Printers, UPS,Scanners
மிகக் குறைந்தவிலையில்

Tamil MP3 CD's, Software CD's, Games CD's

மிகக் குறைந்தவிலையில் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட தமிழில் Software தமிழில் Word

MIPAQ CELERON 566 MHZ And MIPAQ CYRIX 333 MHZ With above configuration

Sole Agent For MPAQ Computers In Srilanka.

MICRO PC SYSTEMS

No. 15, 36th Lane, Wellawatte, Colombo - 06.
Telephone : 074 - 513235, 074 - 516764

Branches

No. 82, New Chetty Street Kotahena, Colombo - 13 Telphone : 074 - 619673 Web : www.mipaq.com

No. 09, Modern Market Hospital Road, Jaffna. Telphone : 021-2067



Easy way to Information technology
Start on
10-06-2001, 4.00 P.M
JAVA
Joint us for a challenging career in Information Technology
STP
Computer World (Pvt) Ltd.
54A, Palaly Road, Jaffna



BIT

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிப் பட்டதாரியாகும் இறுதிச்சந்தர்ப்பம் !

இந்தக் கற்கை நெறிக்கு கொழும்பு பல்கலைக் கழகத்தால் 2ஆம் தடவையாக அனுமதிப்பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவ்விண்ணப்பப் படிவங்களை எமது தலைமைக்காரியாலயத்திலோ அல்லது கிளைநிறுவனத்திலோ பெற்று 10.06.2001 இற்கு முனனர் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கவும்.

**இப்பரீட்சைக்கான தயார்ப்படுத்தல் வகுப்பு எமது தலைமைக்காரியாலயத்தில் நடைபெறுகின்றது.**

Director(Ad) Head Office: IBMS
NO.701, K.K.S ROAD JAFFNA
Branch: IBMS, M.M.V Road Nelliyady. IBMS, Near M.P.C.S, Chankanai.
T.P : 021 3165



TECNOWA Designers & Offset Printers

உங்கள் அச்சுத்தேவைகளை நிறைவு செய்ய யாழ் நகரில் ஓர் புதிய நிறுவனம்.
IBMS கணனிநிறுவனத்தின் சகநிறுவனமாக TECNOWA உதயமாகியுள்ளது.

நீங்கள் விரும்பிய அளவுகளில் (அதிகூடிய அளவு Single Demy - 44.5 cm X 57 cm ) சகல விதமான கலர் Printing வேலைகளையும் அழகாக வடிவமைத்து உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய நிறுவனம் TECNOWA.

Offset Printing க்குத் தேவையான மை,Metal plates,Paper plates ஆகியனவும் விற்பனைக்கு உண்டு.

உங்கள் தொடர்புகளுக்கு:

**IBMS**
**NO:701 K.K.S.Road, Jaffna.**

T.P: 3165

**TECNOWA Designers & Offset Printers**
**NO:717 K.K.S.Road, Jaffna.**


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.